பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 10 வியாழக்கிழமை (25-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:366

## மாவீரர் தினத்துக்கு முன்னோடியாக எழுச்சி நாள் நிகழ்வு இன்று ஆரம்பம்

### தேசியக்கொடியேற்றலுடன் பிரதான நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,நவ.25

மாவீரர் தினத்துக்கு முன்னோடியாக மாவரர் எழுச்சிநாள் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நடைபெறும் தேசியக் கொடியேற்றலுடன் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின்றது.

இன்று முதல் மூன்று தினங்கள் எழுச்சி தினம் அனுஷ்டிக்கப்பட்டு நாளை மறுதினம் மாவீரர் தினம் முன்னெடுக்கப்படும்.

இந்த மூன்று நாள்களும் பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல் (திருவுருவப்படம்), மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரை ஆகிய நிகழ்வுகள் வரிசைக்கிரமப்படி இடம்பெறும் எனறு தமிழீழ மாவீரர் பணிமனை தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வுகள் குறித்து மாவீரர் பணிமனை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாவீரா எழுச்சி நாள்களுக்கான நிகழ்வுகள் இன்று காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி யேற்றலுடன் ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி நாளை மறுதினம் சனிக்கிழமை மாவீரர்நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும். இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாள்களிலும் மாலை 6.00 மணிக்கு கொடி இறககிப்பட்டு மறுநாள் காலை ஏற்றப்படும். சனிக்கிழமை மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் அவை இறக்கபடும்.

பொது நிறுவனங்களிலும், பள்ளிகளிலும், ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின்னர் பகல் 12.01 இன் பின்பாகவும் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலையில் ஏற்றப்பட வேண்டும் என்றுள்ளது. (எ-3-5-6-7)

## யுத்தமோ சமாதானமோ எதற்கும் தமிழர்கள் தயார்!

### நாடாளுமன்றில் நேற்று ரவிராஜ் எம்.பி.சூளுரை



கொழும்பு,நவம்பர்25

**“யுத்தம் என்றால் யுத்தம்; சமாதானம் என்றால் சமாதானம் என அறைகூவல் விடுக்கின்றார் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா. எதற்கும் நாமும் தயார். தமிழர்களின் உரிமைகளுக்காக மரணிக்க தமிழர் கூட்டமைப்புத் தயாராக இருக்கிறது”**

- இப்படிச் சூளுரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ்.

நாடாளுமன்றில் நேற்று வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சமயமே ரவிராஜ் எம்.பி. இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்கள மொழியை 24 மணித்தியாலத்தில் அமுல்படுத்தி இந்த நாட்டில் இனக்குரோதத்துக்கு வழிவகுத்தார். அவர் வழியில் வந்த அம்மையார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மகள் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் மட்டுமன்றி அவரது மகன் அநுராவும் அந்த வழியைத் தொடர்கின்றார். அவர் இங்கு மீண்டும் யுத்தமொன்றுக்கு அழைப்பு விடுக்கிறார்.

இதேசபையில் "யுத்தம் என்றால் யுத்தம்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று பேசிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிராக லிப்டன் சதுக்கத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.25

கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. தேசப்பற்றாளர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்து கொண்டனர்.

புலிகளுக்கு எதிரான அமைப்புக்களாகத் தம்மை இனங்காட்டிக்கொள்ளும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, ஈ.பி.டி.பி., ஈ.என்.டி.

(16ஆம் பக்கம் பார்க்க)

## காதர் எம்.பிக்கு பிணை அனுமதி

கொழும்பு,நவ.25

விளக்கமறியலில் இருந்து வந்த ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட எம்பியான அப்துல் காதர் நேற்றுப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் அவர் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த நீதி மன்று அவரைப்பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டது.

ஒரு லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் இரு நபர்களின் சரீரப்பிணையில் அப்துல் காதரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதவான்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் இரு குடும்பஸ்தர்கள் சுட்டுக்கொலை!

ஏறாவூர்,நவ.25

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்றிரவு இரண்டு குடும்பஸ்தர்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் அழைத்துச்செல்லப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் சண்முகம் தயாபரன் (வயது-32) என்பவர் சந்தை வீதியிலும் சண்பகநாதன் மனோகரன் (வயது-45) என்பவர் விஷ்ணு கோயில் வீதியில் வைத்தும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் முதலாவது நபர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உறவினர்களால் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் வழியில் மரண

(16ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர் தின விளையாட்டுப்போட்டியில்

## ஏற்றிய புலிக்கொடியை இறக்கியது இராணுவம்; எதிர்த்து மக்கள் குழப்பம்; மன்னாரில் பதற்றம்

மன்னார்,நவ.25

மாவீரர்தினத்தையொட்டி மன்னார் பொது விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டு நிகழ்ச்சியிலும், மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்விலும் ஏற்றப்பட்டிருந்த தமிழீழ தேசியக்கொடிகளை அரச படையினர் அகற்றியதையடுத்து மன்னார் நகரப் பகுதியில் நேற்றுப் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

மாவீரர் தின விளையாட்டுப்போட்டி நடந்து கொண்டிருந்த மன்னார் பொதுமைதானத்தில் புலிக்கொடி ஏற்பட்டிருந்தது. அங்கு வந்த இராணுவக் குழு ஒன்று கொடியை இறக்கிச்சென்றது.

அதன் பின்னர் அங்கிருந்த இளைஞர்கள் பலர் ஒன்று கூடி இராணுவத்தினருக்கெதிராக கோஷங்கள் எழுப்பவே இராணுவத்தினர் கொடியினை மைதானத்துக்குள் அமைந்திருந்த மணடப வாசலில் எறிந்துவிட்டுச்சென்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த இளைஞர்களும், விளையாட்டு வீரர்களும் அங்கிருந்த விடுதலை புலிகளிடம் முறையிட்டனர். ஆவேசத்துடன் திரண்ட அனைவரும் இராணுவத்துக்கெதிராக பல் வேறு கோஷங்களை எழுப்பினர். புலிக்கொடி மீண்டும் ஏற்றப்படும் வரை அந்த இடத்தை விட்டு அசைய முடியாது எனவும், கண்காணிப்புக்குழு வரவேண்டும் எனவும், கேட்டுக்கொண்டனர். நிலைமை மோசமாகவே அங்கு இராணுவத்தினரும், பொலீஸாரும் மேலதிகமாகக் குவிக்கப்பட்டனர். பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. நகரெங்கும் பெரும் பதற்றம் பரவியது. என்ன நடக்கப்போகின்றதோ என எண்ணிய மக்கள் வீதியில் இறங்கத் தயங்கினர். கடைகள் பல

(16ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் அடுத்தமாதம் மீண்டும் இலங்கை வருகிறார்!

லண்டன்,நவ.25

நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கான முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்காக அவர் வருகைதரவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையில் சமாதான முயற்சிகள் குறித்து முக்கிய அறிவிப்பு வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து சமாதான முயற்சிகள் அடுத்த கட்டம் ஒன்றை நோக்கி நகரலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

பிரபாகரனின் உரையைத் தொடர்ந்து சமாதான முயற்சிகளை முன் நகர்த்துவதற்கான முயற்சிகளை எப்படி நகர்த்துவது என்று ஆராய்வதற்காகவே சொல்ஹெய்ம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைக்கு வருவதற்கு முன்பதாக விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை எதிர்வரும் முதலாம் திகதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ராஜகிரியவில் முதலாம் திகதியன்று ஐ.தே.கட்சி பெரும் ஆர்ப்பாட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டம் அரச ஊழியர்களின் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கிவிட்டிருப்பதாகச் சாடியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரச ஊழியர்களுக்கு எதிரான வரவு - செலவுத் திட்ட யோசனைகளை அரசு உடனடியாக வாபஸ் பெறவேண்டுமெனவும் கோரியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அரச ஊழியருக்கெதிரான 'பட்ஜெட்' யோசனைகளைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மக்களை எதிர்வரும் முதலாம் திகதி வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தப்போகிறார் எனவும் எச்சரித்தார்.

ராஜித சேனாரத்ன எம்.பி. மேலும் கூறியதாவது:-

அரச ஊழியர்களுக்கு பெருமளவு நிவாரணங்களை வழங்கிவிட்டதாக அரசு கூறி வருகிறது. ஆனால், இம்மியளவான நிவாரணம

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கு தென்மராட்சியில் உதவிகள் கிடைக்கவில்லை

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எந்தவொரு நிவாரண உதவியும் வழங்கப்படாதது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

குடியிருப்புக்களிலிருந்து வெளியேறி ஒரு வாரத்திற்கு மேலாக இடம்பெயர்ந்து தாம் வேறு இடங்களில் தங்கியுள்ள போதிலும் அரச அதிகாரிகளோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ தம்மைப் பார்வையிட விரவில்லையெனவும், தங்காலிக நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை எனவும் - சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

நேற்றைய நிலைவரப்படி சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள தவசிகுளம் கிராமத்தில் 117 குடியிருப்புகளுக்குள்ளும் மந்துவில் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 102 குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதாகவும், இக்கிராமங்கள் மூன்று அடி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நிவாரண உதவி கோரி நேற்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்திருந்தனர். மேலிடங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும இன்னமும் உரிய பதில் கிடைக்கவில்லை எனப் பொதுமக்களுக்கு அங்கு கூறபபட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# மன்னாரில் நேற்று அமைதி ஊர்வலம்

கொழும்பு,நவ.25

மன்னாரில் நேற்றுக்காலை அமைதி ஊர்வலம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வங்காலைக் கத்தோலிக்க மத சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அமைதி ஊர்வலம் மன்னார் செபஸ்தியார் தேவாலயத்தில் இருந்து மன்னார் நுழைவாயில் (மன்னார் பாலம்) வரை இடம்பெற்றது. இதில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

கடந்த செப்ரெம்பர் 10 ஆம் திகதி தமது ஆலயக் கட்டடப்பொருள்கள் சேதப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து பெந்திகொஸ்த்தே சபையால் மன்னார் நீதிமன்றில் வழக்கு ஒன்று தாகல் செய்யப்பட்டிருந்தது. அது நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்களான வங்காலைப் பகுதி அருட்தந்தை உட்பட 17 பேரையும் தலா ஐயாயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

பொய்யான வழக்கைத் தாக்கல் செய்ததாகக்கூறியே நேற்றைய ஊர்வலம் இடம்பெற்றது. இதனால் வங்காலையில் பாடசாலைகள், கடைகள் மூடப்பட்டிருந்தன.

# காரைநகர் மேற்கு வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது

காரைநகர் மேற்கு வீதி வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால் இவ்வீதி ஊடான போக்குவரத்துக்கள் நேற்றுமுதல் தடைப்பட்டுள்ளன.

காரைநகர் வலந்தலைச் சந்தியில் இருந்து சுமார் 5 கி.மீ. நீளமான இவ்வீதி மிகமோசமாகச் சேதமடைந்து பாரிய குழிகள் காணப்படுவதுடன், இரண்டடி உயரத்திற்கு இவ்வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதன் காரணமாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் அனைத்தும் வலந்தலைச் சந்தியுடன் நேற்று இடைநிறுத்தப்பட்டன.

இதனால், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் சிரமரங்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வீதி ஊடான பஸ்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதையடுத்து கால்நடையாகவும் துவிசக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பலர் இவ்வீதிகளில் பாரிய குழிகளில் வீழ்ந்து படுகாயம் அடைவதாகவும்-

படுகாயமடைந்த சிலர் சிகிச்சைக்காகக் காரைநகர் வைத்தியசாலைக்குச் சென்ற போதும் அங்கு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே சிகிச்சை அளிக்கப்படும் எனக் கூறி அவர்கள் திருப்பி அனுப்பப்படுவதாகவும் கூறப்பட்டது. (எ-73)

## நவீனமுறையில் சுத்திகரிக்கப்பட்ட

# குடாநாட்டின் 'சுவிஸ் மினரல்' குடிதண்ணீர் நேற்று வைபவரீதியாக அறிமுகமானது

யாழ்ப்பாணம்,நவ.25

நவீன முறையில் சுத்திகரிக்கப்பட்ட 'சுவிஸ் மினரல்' குடிதண்ணீர் நேற்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதன் அறிமுக விழா நல்லூர் இளங் கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது. சுவிஸ் மினரல் (Swiss Mineral) நிறுவன முகாமையாளர் எஸ்.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா குடிதண்ணீரை அறிமுகம் செய்துவைத்தார்.

மங்கள விளக்கினை யாழ்.பல்கலைக்கழக நுணகலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிதம்பரநாதன், சுவிஸ் நாட்டுப்பிரதிநிதி பிலிப் ஹசானியா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

யாழ்.செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல்துறைப் பேராசிரியர் வி.பி.சிவநாதன், யாழ்வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்ரவீந்திரா மறறும் யாழ்.செலான் வங்கி முகாமையாளர் கு.கன கசிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (ஐ-5)





சுவிஸ் மினரல் எனப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் அறிமுகவிழா நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர். எஸ்.சிதம்பரநாதன் மற்றும் சுவிஸ் நாட்டுப் பிரதிநிதி பிலிப் ஹசானியா ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# குடிசைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு ஊர்காவற்றுறையில் கூரைவிரிப்புக்கள்

ஊர்காவற்றுறை - நாரந்தனை தெற்குப்பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று கூரைவிரிப்புக்கள் வழங்கப்பட்டன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கிய இந்தக் கூரை விரிப்புக்கள் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து நேற்று விநியோகிக்கப்பட்டன. 36 குடும்பங்களுக்கு நேற்றையதினம் கூரைவிரிப்புக்கள் வழங்கப்பட்டன என ஊர்காவற்றுறைப் பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குடிசைகளில் வசிக்கும் மிகவும் வறியவர்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்கள் ஊடாக விண்ணப்பம் சமர்ப்பித்தால் அவர்களுக்கும் கூரை விரிப்புக்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் - சமூகசேவை உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுக்காலை மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாரந்தனை தெற்குப் பகுதிக்கு விஜயம் செய்த தீவகம், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீ மோகனன் தலைமையிலான குழுவினர் அப்பகுதியில் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டதுடன், மக்களைச் சந்தித்து வெள்ளப்பாதிப்புக்குறித்தும் கேட்டறிந்தனர். உதவி அரச அதிபர் தலைமையிலான இந்தக் குழுவில் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கஸ்ரீபதி, சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா, நாரந்தனை தெற்கு கிராமஅலுவலர் எஸ்இராமேஸ்வரன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (எ)

# காக்கைதீவு சிறுவர்களிடையில் தோல் சம்பந்தமான நோய்கள்

யாழ்ப்பாணம், நவ.25

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் காக்கைதீவு கிராமத்தில் வசிக்கும் சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பெரும்பாலான சிறுவர்களுக்கு தோல் சம்பந்தமான நோய் ஏற்பட்டுள்ளதுடன், கால்கள் கரும்படலமாக உள்ளதனை அவதானிக்க முடிகிறது.

காக்கைதீவு, கடற்கரையை அண்டிய பிரதேசமாக இருப்பதனால் கடல்நீர் உட்புகுந்து விடும் என்ற நோக்கில் வாய்க்கால்கள் அடைக்கப்பட்டுள்ளன.

இதனால் கடலை நோக்கி வேறு இடங்களில் இருந்து செல்லும் கழிவு நீரும் காக்கை தீவுப் பகுதியிலேயே தேங்கிவிடுகின்றது. இதனால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன், தோல் சம்பந்தமான நோய்களும் பரவத்தொடங்கியுள்ளன.

இதற்கிடையில் பெரும் மழையால் பாதிக்கப்பட்ட தமக்கு அரச நிறுவனங்களோ அல்லது சர்வதேச நிறுவனங்களோ இதுவரை எந்தவிதமான உதவிகளையும் வழங்கவில்லை என காக்கை தீவு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் இ.சிறி தெரிவித்தார். (எ-185)

# இராமாவிலில் பூசகர் பலியான சம்பவம்; பவுஸர் சாரதி பிணையில் செல்ல அனுமதி

தென்மராட்சி, நவ.25

கொடிகாமம், இராமாவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவத்தினரின் தண்ணீர் பவுஸர் - மோட்டார் சைக்கிள் விபத்துத் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பவுஸர் சாரதி நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பவுஸர் சாரதியான டபிள்யு.டபிள்யு.ஆர். ஜெயசிங்க என்பவரை 15 ஆயிரம் ரூபா பெறுமதியான அரச ஊழியர் ஒருவரின் ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், குறித்த சாரதி இந்த நீதிமன்றின் முன் அனுமதியின்றி யாழ். குடாநாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்ற நிபந்தனையையும் விதிததார்.

விபத்துக்குள்ளான தண்ணீர் பவுஸர் வாகனத்தை 53 ஆவது படையணிக் கட்டளை அதிகாரியிடமும், விபத்தில் பலியான கல்வியங்காட்டைச் சேர்ந்த வரதராஜக்குருக்கள் அரிகர சர்மா செலுத்திவந்த மோட்டார்ச் சைக்கிளை பலியானவரின் தந்தையிடமும் ஒப்படைக்குமாறு பதிவாளரைப் பணித்து, இந்த வழக்கினை டிசெம்பர் எட்டாம் திகதிவரை நீதிவான் ஒத்திவைத்தார். (எ-117)

## நாடாளுமன்றுக்கு செல்லும் பாதையில்

# பிஸ்டல்களுடன் கைதான 4 பேரும் விளக்கமறியலில்

கொழும்பு,நவ.25

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வழியில் ராஜகிரியப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட நான்கு பேரும் வெலிக்கடைப் பொலீஸாரினால் நேற்று புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் டிசெம்பர் ஆறாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மேலதிக நீதிவான் அமாலி ரணவீர அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறும் பணித்தார்.

சற்குணம் கிருஷாந்தன் (அக்கரைப்பற்று), ஜேசுதாசன் ஜெயராஜ் (திருகோணமலை), வேலுப்பிள்ளை நந்தகுமார் (மாதம்பை), அஞ்சலோ அசங்க ஜயவீர (இரத்மலானை) ஆகியோர் நேற்று மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களின் வசமிருந்ததாகக் கூறப்படும் இரண்டு பிஸ்டல்கள் மற்றும் இரண்டு கையடக்கத்தொலைபேசிகளை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் மேலும் உத்தரவிட்டார்.


இந்த நால்வரில் ஓர் இளைஞர் 2000ஆம் ஆண்டில் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி இராணுவத்தினரிடம் சரணடைந்தவர் என்றும், நீண்டகாலம் புனர்வாழ்வு முகாம் ஒன்றில் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டவர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. (எ-க)

## மாவீரர் நாள் – 27

**மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள், அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல; எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.**

**– தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன்.**

# அரசர் ஒருவரைப் போல் நடத்தப்படுகிறார் சதாம் இடைக்காலப் பிரதமரின் ஆலோசகர் தெரிவிப்பு



ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் சிறைவைக்கப்பட்டிருக்கும் இடம் அவரின் அரண்மனையைவிடச் சிறந்தது. அவருக்கு அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. அவர் ஓர் அரசரைப் போல் நடத்தப்படுகிறார் என ஈராக் இடைக்கால அரசின் பிரதமர் இயத் அல்லாவியின் ஆலோசகர் ஜோர்ஜ் சதா தெரிவித்தார்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் சிறைச்சாலையில் எவ்வாறு நடத்தப்படுகின்றார் என உலக நாடுகள் கேள்வி எழுப்பியுள்ளதை அடுத்தே ஜோர்ஜ்சதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து சதா மேலும் தெரிவித்ததாவது -

அமெரிக்க இராணுவத்தினரால் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ள சதாம் ஹுசைனுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவரைச் சிறைவைத்திருக்கும் இடம் சதாம் ஜனாதிபதியாக இருந்தபோது வாழ்ந்த அரண்மனையைவிடச் சிறந்தது. அவர் தங்கியிருக்கும் கட்டடம் முழுவதும் சிறந்த முறையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சதாம் ஹுசைன் சாப்பிடுவதற்காக ஒவ்வொரு நேரமும் 2 வகை உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

அவர் படிப்பதற்காகப் பத்திரிகைகளும் பொழுதைப்போக்கத் தொலைக்காட்சி வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அவருக்கு வழங்கப்படும் உணவில் செம்மறி ஆட்டுக்குட்டி இறைச்சி சமைத்துக் கொடுக்கப்படுகிறது. ஈராக் நாட்டின் மீனும் சமைத்துக் கொடுக்கப்படுகிறது.

மொத்தத்தில் சதாம் ஹுசைன் ஓர் அரசர் போல் நடத்தப்படுகிறார். சதாமுடைய சகாக்களும் அமெரிக்கப் படையினரால் சிறப்பாக நடத்தப்படுகின்றனர் - என்றார். (க-8)



பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசீஸ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

பேச்சு முடிந்த பின்னர் இருவரும் மண்டபத்தைவிட்டு வெளியேறுவதைப் படத்தில் காணலாம்.

# தாக்குதல் எச்சரிக்கையை அடுத்து இந்தியாவில் பலத்த பாதுகாப்பு

புதுடில்லி,நவ.25

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் எனத் தகவல்கள் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து மும்பையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்றுமுன்தினம் மூடப்பட்டது.

வேலைக்கு வந்த ஊழியர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்த நடவடிக்கையினால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

விரைவில் இத்தாக்குதல் நடத்தப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதால் இந்தியாவில் உள்ள அமெரிக்கர்களை விழிப்புடன் இருக்கும்படியும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் அமெரிக்கத் தூதரகம் எச்சரிப்பு அறிவித்தலை விடுத்திருக்கிறது.

புதுடில்லியிலும், மும்பையிலும் தாக்குதல் நடைபெற அதிக வாய்ப்புகள் இருப்பதாக அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க அரசுக்குக் கிடைத்துள்ள தகவலிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்தது.

அமெரிக்கர்களுக்குச் சேவை வழங்கும் நிலையங்கள், அமெரிக்கர்களும் வெளிநாட்டவர்களும் கூடுகின்ற இடங்கள், வர்த்தக நிறுவனங்கள், ஹோட்டல்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலை போன்ற இடங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் எனத் தெரிவதாக அமெரிக்கத் தூதரகத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பொலீஸார் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தூதரக ஊழியர்கள் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-8)

# அரபாத் விஷம் வைத்தே கொல்லப்பட்டார்; பத்தாஹ் இயக்கத் தலைவர் தெரிவிப்பு!

பெய்ரூட்,நவ.25

பலஸ்தீன முன்னாள் தலைவர் யஸீர் அரபாத் விஷம் வைத்துத்தான் கொல்லப்பட்டார் என்பதை உறுதியாக நம்புவதாக பலஸ்தீன அல் - பத்தாஹ இயக்கத் தலைவர் பாரூக் காத்துமி தெரிவித்தார்.

இவ்வமைப்பு பலஸ்தீனத்தில் விடுதலை பெறும் வகையில் மிதவாத சிந்தனையோடு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஷப் பாதிப்புக் காரணமாகவே யஸீர் அரபாத் உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் சிகிச்சைகளும் மருத்துவப் பரிசோதனைகளும் நம்பத் தகுந்தவைகளாக இல்லை. அவரது இரத்தச் செல்கள் அனைத்தும் செயலிழந்ததற்கான காரணம் என்ன? அரபாத் இறந்தமைக்கான காரணம் இதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்காது - என்று பாரூக் காத்துமி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (க-8)

# சுனி மதத்தலைவர் ஒருவர் ஈராக்கில் சுட்டுக் கொலை!

பகுபா,நவ.25

ஈராக்கில் சுனி முஸ்லிம்களின் மதத் தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஷேக் கலாப் அல் - சுகீர் என்ற மதத் தலைவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவரது உடல் வீதியொன்றில் வீசப்பட்டுக் கிடந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கப் படைகள், ஈராக் பாதுகாப்புப் படைகள் மற்றும் தீவிரவாதிகளால் இவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அமெரிக்கப் படையினரும், ஈராக் தேசியப் பாதுகாப்புப் படையினரும் தமது அமைப்பினரை இலக்குவைத்துள்ளனர் என சுனி முஸ்லிம் அமைப்பு குற்றஞ்சாட்டி வந்திருக்கிறது.

இந்நிலையிலேயே இம்மதத் தலைவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து சுனி முஸ்லிம் மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து 'சுனி முஸ்லிம் மதத் தலைவர்கள்' எனும் அமைப்பை உருவாக்கினர். மேற்படி இந்த அமைப்பைச் சேர்ந்த ஷேக் கலாப் அல் - சுகிர் எனும் மதத் தலைவரே மர்மமான முறையில் படுகொலைசெய்யப்பட்டவராவார்.

உலக அரங்கில்

இந்த அமைப்பைச் சேர்ந்த மதத்தலைவர்கள் பலர் தொடராகப் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் இதே அமைப்பைச் சேர்ந்த மதத் தலைவர் ஒருவர் மர்மமான முறையில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

ஈராக்கில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைப் புறக்கணிக்கும் படி சுனி முஸ்லிம் மதத் தலைவர்கள் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இத்தேர்தல் மூலம் ஈராக்கின் ஆட்சி அதிகாரம் ஷியா முஸ்லிம் தலைவர்களிடம் சென்றுவிடும் என்ற அச்சமே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் ஷியாப் பிரிவு முஸ்லிம்களே பெரும்பான்மையாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)






# சந்திரனில் 2025 ஆம் ஆண்டளவில் தளமொன்றை அமைக்க ரஷ்யா திட்டம்

மொஸ்கோ,நவ.25

சந்திரனில் 2025 ஆம் ஆண்டளவில் தளம் ஒன்றை அமைக்க ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது.

இந்தத் தகவலை ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் நிக்கோலாஸ் மாய்சே யேவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

சந்திரனின் உட்கட்டமைப்பு அதன் வளங்கள் பற்றி ஆராயவும் சந்திரனின் பாறைகளில் மாதிரிகளை எடுத்து அவற்றைப் பூமிக்கு அனுப்பவும் இந்தத் தளம் பயன்படும்.

சூரிய மண்டல ஆய்வில் ஈடுபடவும் தானியங்கி விண்கலத்தை உருவாக்கவும் ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது.

2050 ஆம் ஆண்டுகளில் செவ்வாய்க்கிரகத்தில் இவ்வாறான தளமொன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது - என்றார். (க-8)

# சாட்சியங்களைச் சாதகமாக மாற்றிக்கொள்ளவே சங்கரராமனின் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் நிதியுதவி

## தமிழக முதல்வரைச் சாடுகிறது விஸ்வ ஹிந்து பரிஷித்

புதுடில்லி,நவ.25

காஞ்சிபுரக் கோயிலில் கொலைசெய்யப்பட்ட சங்கரராமனின் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்குவதன் மூலம், அக்கொலை தொடர்பான சாட்சியங்களைச் சாதகமாக மாற்றிக்கொள்ளத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சி செய்கிறார்.

- இவ்வாறு விஸ்வ ஹிந்து பரிஷத்தின் (வி.எச்.பி.) பொதுச்செயலாளர் பிரவீன் தொகாடியா குற்றஞ்சாட்டினார்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திரர் மீதான வழக்கைத் தமிழ்நாட்டிலிருந்து குஜராத் மாநிலத்திற்கு மாற்றவேண்டும். ஏனெனில், குஜராத் மாநில அரசின் மீது ஹிந்துக்களுக்கு நம்பிக்கை உண்டு எனவும் தொகாடியா கோரிக்கை விடுத்தார்.

இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் காஞ்சி சங்கராச்சாரியார் விடுதலை செய்யப்படவில்லை என்றால், இந்தியா முழுவதும் போராட்டங்களை விஸ்வ ஹிந்து பரிஷத் தீவிரப்படுத்தும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

புதுடில்லியில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்படி பிரவீண் தொகாடியா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களுக்குக் கூட அதிகம் என்று கூறும்படி 2 லட்சம் ரூபாவையே உதவித் தொகையாக வழங்குகிறது. ஆனால், கொலை செய்யப்பட்ட சங்கரராமனின் குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும் எனத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தது ஏன்? இது சங்கராச்சாரியாருக்கு எதிராகச் சாட்சியளிப்பதற்காக வழங்கப்பட்ட 'வெகுமதி' ஆகாதா?

சங்கராச்சாரியார் மீதான வழக்கைத் தமிழ்நாட்டில் நடத்தினால் அவருக்கு நீதி கிடைக்காது. எனவே, அந்த வழக்கைக் குஜராத் நீதிமன்றத்திற்கு மாற்றவேண்டும்.


ஒருவார காலத்திற்குள் ஜெயேந்திரர் விடுதலை செய்யப்படவேண்டும். இல்லையெனில், நாடுமுழுவதும் போராட்டங்களை நடத்துவோம். இன்னமும் இரு நாள்களில் இப்போராட்டங்கள் குறித்து மதத் தலைவர்கள் அறிவிப்பார்கள்.

ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்ட விவகாரம் குறித்து காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி இதுவரை கருத்துத் தெரிவிக்காமல் இருப்பது ஏன்? சங்கராச்சாரியார் நீதிமன்ற விசாரணையில் இருக்கிறார் என்பதால் கருத்துத் தெரிவிக்கமுடியாது என்கிறார் சோனியா.

ஆனால், பில்கிஸ் பானுவின் வழக்குத் தொடர்பாக மட்டும் எப்படி சோனியாவால் கருத்துக் கூறமுடியும் - என்றார் அவர். (க-8)

HAPPY BIRTHDAY

2ஆவது பிறந்ததின வாழ்த்து



செல்வி ஹெமி

ரஞ்சித்-அனிற்றா தம்பதியினரின் அருந்தவப்புதல்வி செல்வி "ஹெமி" தனது இரண்டாவது பிறந்தநாளை இலண்டனிலுள்ள தமது இல்லத்தில் மிகக் குதூகலத்துடன் கொண்டாடுகின்றார்.

ஹெமிக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, செந்தூரன் மாமா, கவிதா குடும்பத்தினர், இலங்கையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தி கௌசி, மாமா தர்சன், பப்பித் சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று நோய் நொடியின்றி பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

189, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.இராசநாயகம்
(அம்மப்பா)



இன்று! உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயிக்கும் ஒருநாள்!

"உயர் கல்விக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு"
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்து கொள்ளுங்கள்

காலம் - இன்று (25.11.2004)
இடம் - MPCS கேட்போர் கூடம், K.K.S. வீதி,யாழ்ப்பாணம்.
நேரம் - பி.பகல் 3.00 மணி முதல் 5.00மணி வரை




Dr.M.G.R.
Deemed University
OFFSHORE CAMPUS
INFORMATION AND
ADMISSION CENTRE
No.195, Navalar Road,
Jaffna,
T.P.: 021-222 2840

(C/39154) உதயன் Graphics


## குடியிருப்புகளுக்குள் வெள்ளம்; மக்கள் வெளியேற்றம்

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்துவரும் அடைமழையினால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மழை வெள்ளம் குடியிருப்புக்குள் புகுந்து கொண்டதால் வெளியேறிய குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளன.

தென்மராட்சி வடக்கு, தென்மராட்சி கிழக்கு ஆகிய பகுதிகள் மிகவும் மோசமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதிகளில் உள்ள விவசாயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (8-117)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 632 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 23-11-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4114857-4130826 |

லக்கினம் கன்னி

வெற்றி இலக்கங்கள்
22 24 30 45

ஜக்பொட் பரிசு
ரூபா.25,13,300/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ஜக்பொட் ரூபா. 32,95,950/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,50,719 | 10/- | 35,07,190/- |
| 2.இலக்கங்கள் | 32,084 | 20/- | 6,41,680/- |
| 1.இல + லக்கினம் | 31,575 | 30/- | 9,47,250/- |
| 2.இல + லக்கினம் | 3,034 | 100/- | 3,03,400/- |
| 3.இலக்கங்கள் | 862 | 500/- | 4,31,000/- |
| 3.இல + லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 25,13,300/- | - |
| மொத்தம் | 4,18,359 | - | 78,35,770/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,35,770/-

தொடர் இல. 5095804 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 26ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4118185-3-41
4122773-5-41
4121944-1-81
4124579-7-52
4129294-8-25

## உள்ளூராட்சிச் சபைகளின் தொழிலாளர்களுக்குப் பதவி உயர்வு

தென்மராட்சி,நவ.25

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வீதித் தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகியோருக்குப் பதவி உயர்வுகள் கிடைக்கவுள்ளன.

தற்போது தொழிலாளர் தரம் III இல் பணிபுரிவோர் சேவைக் கால அடிப்படையில் தரம் I, தரம் II ஆகிய தரங்களுக்குப் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

நீண்டகாலமாக யாழ். மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைத் தொழிலாளர்கள் தரம் III இல் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் ஒருங்கிணைப்புச் சங்கத்தினர் அண்மையில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து உள்ளூராட்சி அமைச்சர், வடமேல் மாகாண சபை பிரதம செயலாளர் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவினை நியமித்துள்ளார். இக்குழு கூடி ஆராய்ந்து தீர்மானத்தினை நிறைவேற்றவுள்ளதாக அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள ஒருங்கிணைப்பு சங்க யாழ். மாவட்டப் பிரதிநிதி செ.சந்திரகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதங்களை உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (8-117)

## பயணிகளுக்குச் சிரமம்

அரியாலை,நவ.25

நீர்வேலி தெற்கு வெள்ளவாய்க்கால் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். (எ-17)

## அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான அவசரக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய்க் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களைப் பணிக்கு உள்வாங்குவதற்கான விடயம் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-13)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி கனகம்மா



மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பெரியமாவடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி கனகம்மா 22.11.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2004) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பேரம்பலம் வீதி,*
*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.* (38937)(33-13-15

தகவல்:
சி.சின்னராசா (கொலண்ட்)
(மகன்)

### திருமதி தம்பித்துரை தாய் எலிசபெத்

(ஓய்வுபெற்ற தாதியர். யாழ். போதனா வைத்தியசாலை)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வதிவிடமாகவும் கொண்ட தாய் எலிசபெத் நேற்று (24.11.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரையின் மனைவியும் காலஞ்சென்ற அருமைநாயகம், தனானந்தன் மற்றும் பொன்ராசா, செல்வராசா, புனிதவதி, கபிலன் ரான்ஸ்போட் உரிமையாளர் ஜீவானந்தம் ஆகியோரின் தாயாரும் பரமேஸ்வரி, பவளம், அரியமலர் தேவதாஸ், புஸ்பமலர், முத்துலஷ்சுமி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.11.2004) வியாழக்கிழமை பி.ப. 3.00மணிக்கு சூராவத்தை திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை,* தகவல்: மகன்: பொன்ராசா ஜீவானந்தம்,
*சுன்னாகம்.* (38941)(33-13-15 மகள்: புனிதவதி

### நடேசர் ராஜா

740, நாவலர் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜா நேற்று (24.11.2004) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார். நடேசர் - குணவதியின் சிரேஷ்ட மகனும் கனகரத்தினம் - நாகம்மாவின் மருமகனும் மனோறஞ்சிதத்தின் பாசமிகு கணவரும் சாலமன், அகல்யா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் இன்பராணி, புஸ்பராணி, ரகு, பாபு, காந்திமதி, ஸ்ரீகாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், செல்வராஜா, லோகநாதன், வனஜா, நந்தினி, ஜெயக்குமார், கருணாரத்தினம், தனலட்சுமி, நித்தியானந்தன், இந்திராணி, விஜயலட்சுமி, தயாநிதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2004 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

*740, நாவலர் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (38940)

தகவல்:
ச.நடேசர் (தந்தை)




நீங்கள் வெற்றியினை சுவைப்பதற்கு

4

தினங்கள் உள்ளன.

தெற்காசியாவின் போர்ச்சூன் குளோபல் 500 கம்பனிகளுள் ஒன்றான இந்தியன் ஒயில் கோர்ப்பரேசனின் பூரணத்துவத்தின் கீழ் லங்கா ஐஓசி இன் பங்குதாரராக இருங்கள்.

வழங்கல் நடவடிக்கைகள் 29 நவம்பர் 2004 இல் ஆரம்பிக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து வெளியீட்டினை பார்வையிடுங்கள்.

www.lankaioc.net

IOC
Lanka IOC
Bringing Energy to Life

Grey Worldwide

உதயன்

# கல்வியிலும் பாரபட்சம்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து திறமை அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில்தான், மாவட்ட ரீதியிலான ஒதுக்கீட்டின் கீழ் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறையை விரைவில் ரத்துச் செய்து, முழுவதும் திறமை அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குச் சேர்க்கும் முறையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு தீர்மானித்திருக்கின்றது. அதற்கான செயற்றிட்டம் செயலுருப்பெற ஆரம்பித்துவிட்டது.

இன்னும் ஓரிரு ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதி முறை முற்றும் முழுவதாக - ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி - திறமை அடிப்படையில்தான் அமைந்திருக்கும்.

திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் வடக்கு - கிழக்குத் தமிழரின் எண்ணிக்கை 11 முதல் 12 வீதமாகக் கீழிறங்கிச் சென்றுள்ள - வீழ்ச்சியுற்றுள்ள - இந்தவேளையில், அரசின் புதியதிட்டம் தமிழர்களின் உயர்கல்வி வாய்ப்பைப் பெரிதும் பாதிக்கப் போகின்றது என்று தமிழர் கல்வித்துறை தொடர்பான நிர்வாக வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

அரசின் உத்தேச செயற்பாட்டுத் திட்டத்தின் பின்னணியை நோக்கு முன்னர், பல்கலைக்கழக அனுமதி விவகாரம் தொடர்பாகத் தமிழருக்கு எதிராகத் தென்னிலங்கை அரசுகள் திட்டமிட்டுச் செய்துவந்த சதி பற்றிய சரித்திரத்தைச் சுருக்கமாகப் பார்ப்பது பொருத்தமானது.

தமிழரின் அழியாச் சொத்து கல்வி. அதில் ஈழத்தமிழர்கள் விஞ்சியும், முந்தியும் நின்றார்கள்.

இலங்கைத் தீவுக்குப் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் சுதந்திரம் வழங்க முன்வந்த சமயத்திலேயே தமிழரின் கல்விநிலை உயர்ந்து நின்றது. 1942 இல் எடுத்த புள்ளிவிவரங்களின்படி நாட்டின் பல்கலைக்கழக அனுமதியில தமிழரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அப்போது முற்றிலும் திறமையடிப்படையில் இடம்பெற்ற பல்கலைக்கழக அனுமதியில் மூன்றில் ஒரு பங்கை (32 வீதம்) தமிழரே பெற்றனர்.

இதனைத் தென்னிலங்கைப் பேரினவாத அரசுகளால் பொறுக்கமுடியவில்லை. கல்வித் திறமையால் தமிழர் பெற்ற செல்வாக்கை சதி வலைமூலம் உடைக்கத் தென்னிலங்கை திட்டமிட்டது. அந்தக் கைங்கரியத்தைச் சிறப்பாகத் திட்டமிட்டு முன்னெடுத்தவர் இப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க.

1970 முதல் 1977 வரை ஆட்சியிலிருந்த சிறிமா அரசு, மாவட்ட சனத்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப பல்கலைக் கழக அனுமதி என்ற முறையைத் திடீரெனப் புகுத்தியது. ஆக, முப்பது வீதம் மட்டுமே திறமை அடிப்படையில் வழங்கப்பட்டது.

இதனால், ஜி.சீ.ஈ. (உயர்தரப் பரீட்சையில்) திறமைப் பெறுபேறு பெற்ற தமிழ் மாணவர்கள் பலருக்குப் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட, தென்னிலங்கையில் குறைந்த சித்தியோடு தெரிவான சிங்கள மாணவர்கள் பலர் உயர் கல்வி வசதியை - வாய்ப்பை - பெற்றனர்.

வாழ்வுரிமைக்காக - சுதந்திரத்துக்காக - குரல் எழுப்பிக் கொண்டிருந்த தமிழர்களின் உயர் கல்வி கற்பதற்கான உரிமையும் நயவஞ்சக முறையில் பறிக்கப்பட்ட போதுதான் உரிமைக்கான போராட்டம் அஹிம்சை வழியிலிருந்து ஆயுத வழிக்குத் திரும்பியது. தமிழரின் விடுதலைப் போராட்ட பரிணாம வளர்ச்சியில், அதை முண்டித் தள்ளி, முன்நகர்த்திய காரணிகளுள் இந்தக் கல்வி உரிமைப் பறிப்பு நடவடிக்கைக்கும் முக்கிய பங்கு உள்ளது.

இந்தக் கல்வி உரிமைப் பறிப்புக்கு மத்தியிலும் கல்வித்துறையில் விடாது சாதித்து வந்தது தமிழினம். பல்கலைக்கழகத் தெரிவுக்கு மாவட்ட ரீதியாக ஒதுக்கப்பட்ட 70 வீதம் போக, எஞ்சிய - திறமை அடிப்படைத் தெரிவுக்கான - 30 வீத இடத்தில் கணிசமான பங்கைத் தமிழினம் தக்கவைத்திருந்தது.

ஆனால், தமிழர் தாயகத்தில் தொடர்ந்த யுத்தத்தினால் விளைந்த மோசமான பாதிப்புகள் கல்வித்துறைப் புறக்கணிப்பு, கல்விக்கான பௌதிக வளங்கள் - வாய்ப்புகள் மறுப்பு, மோசமான ஆசிரிய பற்றாக்குறை, இடம்பெயர்வுகள் ஏற்படுத்திய அனர்த்தங்கள் ஆகியவற்றால் கல்வித்துறையில் தமிழர் தாயகம் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது. இதனால் திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெறும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை இப்போது 11 முதல் 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இந்த நிலையில், பெரும்பாலான தமிழ் மாணவர்கள் மாவட்டக் 'கோட்டா' அனுமதி மூலமே உயர் கல்வித் தகுதிக்கான வாய்ப்பைப் பெறும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

முன்னர், திறமை அடிப்படையில் தமிழர்கள் அதிக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றபோது அதற்கு வேட்டுவைக்கும் விதத்தில் மாவட்டக் கோட்டா முறையை அறிமுகப்படுத்திய தென்னிலங்கை அரசு, இப்போது திறமை முறைத் தெரிவில் வாய்ப்பைக் கோட்டைவிட்டு, மாவட்ட முறைக் கோட்டாவில் மட்டுமே தமிழர்கள் தங்கியிருக்கும் போது, அந்த வாய்ப்பையும் தட்டிவீழ்த்தத் தயாராகிவிட்டது. மாவட்ட முறைத் தெரிவை ரத்துச் செய்து, திறமை அடிப்படைத் தெரிவுமுறையை மட்டும் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் மீண்டும் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துவிட்டது.

கல்வித்திட்டங்கள், நாட்டின் நன்மை கருதியவை அல்லாமல், தமிழர்களை ஒதுக்கவென்றே தயாரிக்கப்பட்டு, பின்பற்றப்படும் நிலைமையே இந்த நாட்டில் தொடர்கின்றது.

### உணவு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க

# வல்லைப்பாலப் புனரமைப்புப் பணியை இப்போது ஆரம்பிக்க வேண்டாம்!

### புனர்வாழ்வு அமைச்சுக்கு அரச அதிபர் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.25

குடாநாட்டில் எரிபொருள், உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க, திருத்த வேலைக்காக வல்லைப் பாலத்தை உடைக்க வேண்டாம்.

- இப்படியான அவசர கோரிக்கை ஒன்றை புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சுச் செயலருக்கு யாழ்அரச அதிபர் செபத்மநாதன் விடுத்துள்ளார்.

அரச அதிபர் நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியில் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாவற்குழி, கைதடி, வல்லை ஆகிய மூன்று பாலங்களையும் ஒரே நேரத்தில் புனர்நிர்மாணம் செய்ய ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கியிருந்தீர்கள்.

கைதடியில் உள்ள பாலம் உடைக்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தப் பாதை ஊடான போக்குவரத்துக்கு மாற்றுப்பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மழைகாலமாகையால் அந்தப் பாதை ஊடாகக் கனரக வாகனங்கள் செல்லமுடியாத நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக வல்லைப்பாலம் ஊடாகவே எரிபொருள் வாகனங்கள் நகருக்கு வருகின்றன.

கைதடிப் பாலத் திருத்தவேலைகள் முடிவடைவதற்கு முன்னர் வல்லைப்பாலத்தையும் உடைத்து புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் யாழ்நகர் மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கான உணவு, எரிபொருள் விநியோகம் பாதிக்கப்படும்.

இந்நிலையைத் தவிர்ப்பதற்காக கைதடிப்பால வேலைகள் முடிவடையும் வரை வல்லைப் பாலப் பணிகளை ஆரம்பிக்க வேண்டாம் என்று அந்தப் பணியை மேற்கொள்ளவிருக்கும் ஒப்பந்தகாரருக்கு அறிவிக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலைமையில் வல்லைப் பாலத்தை ஓரிரு மாதங்கள் பேண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீதி அதிகார சபையின் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடல்களின்படி விசேட குழு ஒன்று வல்லையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பாலத்தில் ஏதாவது உடைப்பு ஏற்பட்டால் அந்தக்குழு செப்பனிட்டு, போக்குவரத்தைச் சீராக்க உதவும்.

எனவே, உடனடியாக வல்லைப் பால வேலைகளை ஆரம்பிக்க வேண்டாம் என ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தல் விடுங்கள் - இப்படி அரச அதிபர் தமது கோரிக்கையில் கேட்டுள்ளார்.

புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் திட்டப்பணிப்பாளர் செல்வி நல்லதம்பிக்கும் இக்கோரிக்கையின் பிரதியை அரச அதிபர் அனுப்பியுள்ளார். (3)

# யாழ்ப்பாணத்திலிருந்து கடத்திவரப்பட்ட தொன்மை வாய்ந்த தெய்வ விக்கிரகங்கள்

### கொட்டாஞ்சேனைப் பகுதியில் கண்டுபிடிப்பு



குடாநாட்டு இந்து ஆலயங்களிலிருந்து களவாடப்பட்டுள்ளதாகக் கருதப்படும் வெண்கலம் மற்றும் கருங்கற்களினால் வடிவமைக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற 9 தெய்வ விக்கிரகங்களைக் கொட்டாஞ்சேனையில் உள்ள 'லொட்ஜ்' ஒன்றின் முன்னிலையில் லொறியொன்றிலிருந்து இறக்கும்போது கொட்டாஞ்சேனைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

ராஜகிரியாவில் உள்ள வர்த்தகரொருவருக்கு விற்கும் நோக்கில் சாக்குகளில் மறைத்துக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சிலைகளோடு நான்கு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று 'லங்காதீப' பத்திரிகை படத்துடன் செய்தி வெளியிட்டிருக்கிறது.

தமக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்தே சரியான சந்தர்ப்பத்தில் அந்த விக்கிரகங்களைக் கைப்பற்ற முடிந்தது என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விக்கிரகங்களைப் பற்றித் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் இச் சிலைகளின் தொன்மை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலீஸார், மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியோடு சந்தேக நபர்கள் விசாரணைசெய்யப்பட்டு நீதிமன்றம் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

இச் சிலைகளைக் கடத்தி வந்த நபர்களில் ஒருவர் கால் பாதத்தை இழந்தவர் என்றும் தமிழில் மட்டும் உரையாடத் தெரிந்தவர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய விருது வழங்கும் விழா ஞாயிறன்று

கொழும்பு,நவ.25

இலங்கைத் தமிழர் ஊடகவியலாளர் ஒன்றியம் நடத்தும் விருது வழங்கும் விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எம்.தேவகௌரி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்கிறார்.

நிகழ்வில் மங்கள விளக்கினை வீரகேசரிப் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் குமார் நடேசன், தினக்குரல் பத்திரிகையின் இயக்குநர் எஸ்.பி.சாமி, சுடர்ஒளி மற்றும் உதயன் பத்திரிகைகளின் ஸ்தாபகர் ஈ.சரவணபவன், யுனைற்றற் பார்சல் சேவிஸ் பணிப்பாளர் ஏ.கந்தசாமி, மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் பொன்.வல்லிபுரம், புதிய கதிரேசன் ஆலய அறங்காவலர் எஸ்.சுப்பிரமணியம் செட்டியார் மற்றும் புரவலர் ஹாஷிம உமர் ஆகியோர் ஏற்றிவைப்பர்.

மௌன அஞ்சலி மற்றும் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து வரவேற்புரையை வீரகேசரிப் பத்திரிகையைச் சேர்ந்த எஸ். சித்திராஞ்சன் நிகழ்த்துவார்.

தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை ஆகியவற்றை அடுத்து மலர் வெளியீடு இடம்பெறும். இதழியல் கல்லூரி விரிவுரையாளர் ஆ.சிவநேசச்செல்வன் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை சக்தி தொலைக்காட்சி நிலையப் பணிப்பாளர் ஜே.ஸ்ரீரங்கா பெற்றுக்கொள்வார்.

நிகழ்வில் அடுத்து கவிஞா சோ.பத்மநாதன் தலைமையில் 'ஊடகத் தத்துவம்' என்ற பொருளில் கவியரங்கம் இடம் பெறும்.

சூரியன் எவ்.எம்.ஐச் சேர்ந்த ஆர்.பி. லோஷன், தீபம் தொலைக்காட்சியைச் சேர்ந்த இளைய அப்துல்லாஹ், தினக்குரல் பத்திரிகையைச் சேர்ந்த ஸ்ரீ பிரசாந்தன், தினகரன் பத்திரிகையைச் சேர்ந்த சி.சிவகுமார் மற்றும் வெக்டோன் தொலைக்காட்சியைச் சேர்ந்த இ.தயானந்தா ஆகியோர் கவிதை படிப்பர்.

தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். வீரகேசரி மற்றும் சுடர்ஒளி பத்திரிகைகளில் பணியாற்றிய எஸ்.எட்வேர்ட், ஈழநாதம் பத்திரிகையைச் சேர்ந்த எஸ்.சிவபாலன், வீரகேசரிப் பத்திரிகையைச் சேர்ந்த எம்.கே. ஜீவகதாஸ், தினக்குரல் பத்திரிகையைச் சேர்ந்த எம்.ஏ.எம்.நிலாம், இலங்கை வானொலியைச்சேர்ந்த இராஜேஸ்வரி சண்முகம், சூரியன் எவ்.எம்.ஐச்சேர்ந்த என்.குருபரன், சுயாதீனப் பத்திரிகையாளர்களான கனகரவி மற்றும் சோ.ஸ்ரீதரன், தினக்குரல் பத்திரிகையைச் சேர்ந்த எஸ். வேதநாயகம், வீரகேசரிப் பத்திரிகையைச் சேர்ந்த ஜோய் ஜெயக்குமார், தினக்குரல் பத்திரிகையைச் சேர்ந்த அ.யோகமூர்த்தி ஆகியோரே விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வில் இறுதியாக நர்த்தன சங்கம நாட்டிய நிகழ்வு இடம்பெறும்.(க-8)

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி

### மட்டக்களப்பில் நாளை திறக்கப்படுகிறது

மட்டக்களப்பு,நவ.25

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியின் 9 ஆவது பிரதேசக் கிளை மட்டக்களப்பு கரடியனாறு பிரதான வீதியில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வங்கி மூலம் செங்கலடிப் பிரதேசத்திற்குட்பட்ட முதலற்ற முயற்சியாளர்களுக்குப் பல்வேறு தொழில்களுக்கான இலகு கடன்களை வழங்கவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (8-202)

# 'மிருசுவில் தரிசனம்' ஆவணநூல் கனடாவில் வெளியிடப்படவுள்ளது

மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயம் பங்குத்தளமாக பிரகடனப்படுத்தப்பட்ட 110 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'மிருசுவில் தரிசனம்' என்னும் வரலாற்று ஆவணநூல் ஒன்று கனடாவில் வெளியிடப்படவுள்ளது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும மிருசுவில் மக்களால் வெளியிடப்படவுள்ள இவ் ஆவண நூலின் வெளியீட்டு விழாக்களை பிரான்ஸ், லண்டன் ஜேர்மன் ஆகிய நாடுகளிலும் கொழும்பு, மிருசுவில் போன்ற இடங்களிலும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

அத்துடன், இவ்வாலயம் குறித்த தகவல்களை உள்ளடக்கிய இணையத்தளமொன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி காலை பெருவிழாத் திருப்பலியுடன் நிறைவு பெறவுள்ளது. இப் பெருவிழாவில் மிருசுவில் பங்கைச் சேர்ந்தவர்களான பதுளை மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு மார்ஷல இராஜநாயகம், யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்திரு ஜேக்கப் நிக்கிலஸ் ஆகியோரால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (10-15-202)

### நாளை

கார்த்திகை 11
வெள்ளிக்கிழமை
(26.11.2004)
திதி: பூரணை
பின்னிரவு 01.33 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
நள்ளிரவு 12.07
சுபநேரம் : 06.12 - 07.42
ராகுகாலம் : 10.42 - 12.12
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்ல செயல்களுக்குக் கிடைக்கும் பலன்கள் காலம் கடந்துதான் கிடைக்கும்.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 03 - 1910



மறைவு 18 - 11 - 2002

### அமரர் சின்னத்தம்பி இரத்தினம் பத்தர்

திதி: சதுர்த்தசி

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறவில்லை எம்மனது!
ஈண்டு உமது நினைவுடனேயே நாமிங்கு வாழ்கிறோம்
எங்கு பார்த்தாலும் உங்கள் திருமுகம்தான் தெரிகிறதே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

இ.தங்கேஸ்வரன் (மகன்)
குடும்பத்தினர்.

கலைமகள் வீதி,
கல்வியங்காடு.

(38931)(24-14-44)

## நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காம்
தவசிகுளம் மிருசுவிலைச் சேர்ந்த

**அமரர் அந்தோனிப்பிள்ளை இராயப்பு (ராசு)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று எம்மை ஆறுதல்படுத்தியவர்களுக்கும் தொலைபேசி, பத்திரிகை, துண்டுப்பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் திருப்பலி வழிபாடுகள் மூலம் இறைவனை இறைஞ்சிய பங்குத்தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், ஆலயங்களைச் சேர்ந்த வழிபாட்டுக் குழுவினர், பாடகர் குழாமினர், இளைஞர் ஒன்றியத்தினர், இரங்கலுரையாற்றியவர்கள், இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றோர் மற்றும் பல்வேறு விதத்திலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என்றும் நன்றியுடையவர்களாக நாமிருக்கின்றோம்.

தவசிகுளம்,
மிருசுவில்.

குடும்பத்தினர்.

(38925)(39-14-44-24)

### எழுத்துப் பரீட்சை 29ஆம் திகதி

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சையின் வாய்மொழிப் பரீட்சைகள் நிறைவடைந்த நிலையில் தற்போது செய்முறைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, இறுதிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

இதுவரை இப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் மா.அலோசியஸ் கேட்டுள்ளார். (10-12)

### திருக்கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம்,நவ.25

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயத் திருக்கார்த்திகை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் நாளை நண்பகல் 12 மணிக்குத் தெல்லிப்பழைத் தடைமுகாமிற்குச் சமுகம் தருமாறு ஆலய அறங்காவலர் சபையினர் கேட்டுள்ளனர். (10-202)

## வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் செயலாளரினால் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 2004.12.01ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்களில் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2004.12.02ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.
03. கேள்விகள் 2004.12.02ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதிசேர் வரி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | நீலன்குளத்தாள் வீதி புனரமைப்பு | 5500.00 | 500.00 | 75.00 |
| 02. | தக்குச்சம்பாதி வீதி புனரமைப்பு | 3500.00 | 500.00 | 75.00 |

ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.

(சி-39278) (24-14-44)





(C/39259) உதயன் Graphics

## தமிழீழ விளையாட்டுத்துறையின் வெளியீடுகளான

- 50ஆவது அகவையில் தேசியத் தலைவரின் சிந்தனையில் தமிழீழ விளையாட்டுத்துறை (சஞ்சிகை)
- உதைபந்தாட்டப் பயிற்சி தமிழ் மொழியாக்கம் (இறுவட்டு)
- சென்சி.லீ.சியித்தின் தமிழீழ வருகை (கராத்தே இறுவட்டு)

**யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு**
**26.11.2004 வெள்ளி பி.ப. 3.30 மணி**

பொன்னான இந்நன்னாளில் தங்கள் முன்னிலையில் எங்கள் சஞ்சிகையை வெளியிட விரும்புகின்றோம். வருகை தந்து வெளியீட்டு விழாவைச் சிறப்பித்துத்தர அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விளையாட்டுத்துறை.

# தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சிங்களவர் உணரத் தொடங்கிவிட்டனர்

## இது ஒரு நல்ல திருப்பம் என்கிறார் இளம்பரிதி



வலி,கிழக்கு.25

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தை தற்போது தென்னிலங்கை சிங்கள மக்கள் மெல்லமெல்ல உணரத் தொடங்கிவிட்டனர். இது ஒரு நல்ல திருப்புமுனையினை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினார் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அண்மையில் பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற பரிசில் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று தமிழர்களது போராட்டம் நியாயமானது என்பதைக் கூடிய விகிதாசாரமான சிங்கள மக்கள் ஏற்றுள்ளனர். ஆனால், அரசியல் லாபம்தேடும் சில தீய பேரினவாத சக்திகளே இதனைக் குழப்பிவருகின்றன.

முன்னர் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் எதிர்க்கட்சிகள் மாறிமாறி எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தடையாகவே இருந்து வந்துள்ளன இது வரலாறு. ஆனால், இன்று பலம்பெற்ற எதிர்க்கட்சி, புலிகளுடன் நிபந்தனையற்றுப் பேச்சு நடத்துவதற்கு அரசுடன் ஒத்துழைக்கத் தயார் என்று நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

இதற்குக் காரணம் எமது இராணுவ -அரசியல் பலமே. நாம் இன்று இராணுவபலத்தைச் சமமாக வைத்துக்கொண்டு இருக்கும் நிலையிலும் எமது தலைவர் அரசியல் பலத்தையும் வெகுவாகக் கட்டியெழுப்பி வருகின்றார்.

தமிழ்மக்கள் ஆண்டாண்டு காலமாக இழந்து வரும் உயிர்கள், பெறுமதிமிக்க உடைமைகளை இனியும் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது.

இனியும் எமது மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டேபோகும் நிலை உருவாகக்கூடாது.

சிங்களப் பேரினவாதிகளுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். தென்னிலங்கையில் இருந்து வருகைதந்து எம்மைச்சந்தித்த தென்னிலங்கைச் சிங்களப் பொது அமைப்புப் பிரதிநிதிகள் போனறோர்களுக்கு இதனை விளக்கி வருகின்றோம்.

நாம் கேட்பது எமது உரிமையைத்தான். அதைத் தர அரசு இனியும் மறுத்தால் அரசு பெரும் வரலாற்றுத் தவறை விடவேண்டிவரும் என்று அவர்களிடம் கூறுகின்றோம்.

சிங்கள மக்கள் இனவெறி பிடித்த பேரினவாதத் தலைவர்களைப் பதவியில் இருந்து தூக்கி எறியவேண்டும்.

எனவே, சிங்கள மக்களும் சர்வதேச சமூகமும்தான் இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அவர்களுக்கு எடுத்துக் கூறுகின்றோம் - என்று கூறினார்.

இளம்பரிதியைத் தொடர்ந்து யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கோப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இறுதியில் மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ப-4-180)

# மாவீரர்களின் பெற்றோரை இந்த மண் ஒருபோதும் மறக்காது



நல்லூர்,நவ.25

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பதன்மூலம் உலகம் கொடுக்காத மரியாதையை எமது தேசியத் தலைவர் பெற்றோர்களுக்குக் கொடுத்துள்ளார்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் தேசிய எழுச்சிப்பேரவையின் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் பேசிய தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் கூறினார்.

யாழ்ப்பாணம் தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாணப் பிரிவுக்கான மாவீரர் பெற் றோர் கௌரவிப்பு நிகழ்வு அதன் செயலாளர் எஸ்.சிவஞானசேகரன் தலைமையில் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசிய சொலமன் சிறில் கூறியதாவது:-

உயிர் உன்னதமானது என்பதை நீங்கள் அறிந்திருந்தபோதும் உங்கள் பிள்ளைகளை விடுதலைப் போரில் கலந்துகொள்ள வைத்துள்ளீர்கள். உங்களது பங்களிப்பை நன்கு உணர்ந்த தேசியத் தலைவர் உங்களைக் கௌரவிக்கவேண்டும் என்று நினைத்ததன் காரணமே இந்த விழா.

யாழ். குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய சமயம் இங்கு காணப்பட்ட மாவீரர்களின் உருவச் சிலைகள், படங்கள், மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்து, ஒழித்துப் போராட்டம் நடைபெற்றதற்கான அடையாளங்களையே இருக்கவிடமாட்டோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்ட இராணுவ அதிகாரிகளின் அடையாளங்களையே இல்லாதொழித்தவர்கள் உங்கள் பிள்ளைகள்.

தேச விடுதலைப் போராட்டத்தில் இணையுங்கள் எனத் தலைவர் கேட்டபோது தேசத்தின் விடுதலையே முக்கியம் எனக் கொண்டு ஆகுதியான மாவீரர்களை இந்த விடுதலைப் போருக்கு அர்ப்பணித்த பெற்றோரை இந்த மண் ஒருபோதும் மறக்காது.

தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்துவதன் மூலம் மாவீரர்களின் சுதந்திர தமிழீழத்திற்கான அர்ப்பணிப்பைப் பயனுள்ளதாக்கவேண்டும் - என்றார்.

சிவஞானசேகரம் தனது தலைமையுரையில்-

எமது தேசம் விடுதலை பெற மாவீரர்கள் ஆற்றிய பணிகள் உன்னதமானது. அவர்களால் எமது மண்ணின் விடிவிற்காகத் தந்த பெற்றோர்களான நீங்கள் பெருமையடைகின்றீர்கள் - என்றார்.

பெற்றோர்கள் சார்பில் பேசிய பிரம்மஸ்ரீ யோகேஸ்வரக் குருக்கள்:-

ஒரு புயலில் சிக்கிக்கொண்ட அனுபவங்களை நாம் இப்போது பெற்றிருக்கிறோம்.




மாவீரர்கள் என்ன நோக்குடன் - சிந்தனையுடன் செயற்பட்டார்களோ அது நிறைவேற வேண்டும் என்பதே பெற்றோராகிய எமது விருப்பமும் ஆகும். தேசியத் தலைவருக்கு எமது ஆதரவு என்றும் இருக்கும் என்றார்.

யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி, திருமதி சகுந்தலா தேவி, எஸ்.புலேந்திரராசா, க.தம்பிஐயா, சன்மார்க்க வித்தியாலய அதிபர் சி.மாணிக்கராசா உட்படப் பலர் பேசினார்கள். (ப-111)

## திருமுறைகள் பக்தியுடன் பாடப்படும் போது

# உள்ளம் தூய்மையடைந்து சுமைகளும் குறைகின்றன



யாழ்ப்பாணம்,நவ.25

திருமுறைகள் பக்தி சிரத்தையோடு ஓதப்படுகின்றபோது உள்ளம் தூய்மையடைவதுடன், அதனுடைய சுமைகளும குறைந்துவிடுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் கல்வி வலய சேவைக்கால சைவசமயப் பாட ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த. சத்தியதாசன்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற சைவத்திருமுறை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய இளம் சமுதாயம் வழி தடுமாறிச் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில், அவர்களுடைய தவறான பாதையினைச் செம்மையாக்க ஆன்மீகச் சிந்தனை விதைக்கப்படவேண்டும்.

அத்துடன், திருமுறைகளை ஓதுகின்றவர்களாக அவர்களை வளப்படுத்தவேண்டும்.

விஞ்ஞானச் செய்முறையில் கரைசல்களைச் சரியான முறையில், சரியான பௌதிக சூழலுக கமைவாகச் செய்யும்போது அதனுடைய முடிவுகள் நிறைவானதாகவும், பயனுள்ளதாகவும் அமைகின்றது. அதுபோலத்தான் திருமுறைகளைப் பக்தி சிரத்தையுடன், தூய உள்ளத்துடன் ஓதினால் நல்ல பயனை அடையமுடியும். எண்ணங்கள் நல்லனவாகத் தோற்றம் பெறும். உள்ளத்திலுள்ள துன்பங்களும், சுமைகளும் இறங்கிவிட்டது போன்ற உணர்வு ஏற்படும் -என்றார் அவர்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தனதுரையில்:

திருமுறைகளைப் பாடும்போது மட்டும் உள்ளம் அமைதி பெறுவதுபோல, அதனைவிட அத்திருமுறைகள் ஒலிக்கின்றபோதும் கேட்கின்றபோதும், மனம் ஏதோ ஓர் இனம் புரியாத அமைதியைப் பெற்றது போன்ற உணர்வு எம்முன்னே பொங்கிப் பிரவாகிக்கின்றன.

• இன்றைய மாணவ சமுதாயம் உண்மையில ஆன்மீகச் சிந்தனையுடையவர்களாகத் தோற்றம்பெற வேண்டுமென்றால் இத்தகைய திருமுறைகளை அவர்கள் நினைத்தல் வேண்டும் - என்றார். (ப-13)

# எமது கல்வித்திட்டத்துடன் சாயிபாபாவின் மேம்பாட்டுத் திட்டம் இணைக்கப்பட வேண்டும்

## புதிய சமுதாயத்தை உருவாக்க இதுவழி என்கிறார் பேராசிரியர்

யாழ்ப்பாணம்,நவ.25

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தை எமது கல்வித் திட்டத்துடன் இணைத்துச் செயற்படுவதன் மூலம் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராஜா.



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 79 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுமுன்தினம் திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சேவை நிலையத்தில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிலையத்தின் தலைவர் ஸ்ரீ.ஏ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலகட்டத்தில் எமது சமுதாயத்தில் மனித விழுமியங்கள், பண்பாட்டுக் கலாசாரங்கள் மருவிவருவதுடன், அமைதியின்மை, வன்முறைகள், போதைப்பொருள்களின் பாவனை போன்றவை என்றுமே இல்லாதவாறு அதிகரித்து வருகின்றன. எமது இளைஞர்களின் வாழ்க்கைப்பாதை திசைமாறிக்கொண்டு செல்கிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான முன்முயற்சிகளை நாம் அனைவரும் இணைந்து மேற்கொள்ளவேண்டும்.

இதற்கு எம்மிடம் தற்போதுள்ள ஒரேயொரு மார்க்கம் பகவான் பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வியை எமது இளைஞர் மத்தியில் தாமதமின்றி அறிமுகப்படுத்தவேண்டும். இன்று எமது சமுதாயம் பல சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகிறது.

இன்று எம் மத்தியிலுள்ள கற்றவர்கள் மத்தியில் சுயநலம், சுயலாபம் மற்றும் தம் முன்னேற்றம் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டே வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலை மாற்றமடையவேண்டும் என்று கூறினார்.

உலகிலேயே பல கல்வித் திட்டங்கள் இருக்கின்ற போதும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட மனித மேம்பாட்டுக் கல்விக்கு ஈடு இணையான கல்வித்திட்டம் எதுவும் இல்லை. இக்கல்வித்திட்டத்தினை எமது நாட்டின் கல்வித் திட்டத்தில் இணைத்துக் கற்பிப்பதன் மூலம் ஓர் ஆரோக்கியமான புதிய சமுதாயத்தை உருவாக்கமுடியும் என அவர் மேலும் கூறினார்.

இந்நிகழ்வின் இறுதியில் சேவை நிலையத்தால் நடத்தப்பட்ட தையற் பயிற்சிநெறியில் பங்குபற்றிய இளம் பெண்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவற்றைப் பேராசிரியர் சபா.ஜெயராஜா வழங்கினார். (ப)

## சாவகச்சேரி வைத்தியசாலையின்

# புதிய கட்டடத்துக்கான வரைபடம் தயார்; ஆனால் நிதி ஆதாரங்களைத்தான் காணோம்!

## அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் வைத்திய அதிகாரி ஆதங்கம்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் எவ்விதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில், இருக்கின்ற வளங்களைக்கொண்டு நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்து வருகின்றோம் என்று தெரிவித்தார் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி செ.அம்பிகைபாகன்.

வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்ற வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மீள் புனரமைப்புக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது கூறியதாவது:

தென்மராட்சியில் மக்கள் 2002ஆம் ஆண்டு மீளக் குடியமரப் பின்வாங்கினர். அதற்கு முக்கிய காரணம் தமக்கு ஏற்படும் வியாதிகள், விபத்துக்கள் மற்றும் மகப்பேறுகள் ஏற்படும் காலங்களில் என்ன செய்வது என்ற கலக்கம் மக்களிடம் காணப்பட்டது. அந்த நிலையில், சுகாதாரப் பிராந்திய அலுவலகம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையை மீள இயக்கத் திட்டமிட்டது. ஆனால், இங்கு பணிபுரிய வைத்தியர்கள் பின்னடித்தனர். இந்த நிலையில்தான் மக்களுக்குச் சேவை புரிய முன்வந்தேன். வைத்தியசாலையை இயக்க எனக்குப் பக்க பலமாகப் பொது அமைப்புக்கள் உதவின. அவர்கள் சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்தார்கள். வைத்தியசாலைப் பணியாளர்கள் நேரம் பாராது எனக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அதுமட்டுமல்லாமல், பொது மக்கள் பலர் உதவிகள் பல செய்துள்ளார்கள். இதனால் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, மக்களது, நோயாளர்களது தேவைகளைப் பூர்த்திசெய்கிறது.

எமது வைத்தியசாலையில் நில வளம் போதியளவு உள்ளது. இந்நிலத்தில் அழிந்த கட்டட இடிபாடுகளை அகற்றிப் புதிய கட்டடங்களை நிர்மாணிக்க வரைபடமும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், எவரும் கட்டடங்களை அமைக்க நிதியை வழங்க முன்வருவதாக இல்லை. இங்கு பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் வருகின்றார்கள். படம் பிடிக்கிறார்கள், வீடியோ படம் எடுக்கிறார்கள், என்னுடன் பேசுகிறார்கள். புதிய கட்டடம் அமைத்துத் தருவதாகக் கூறுகிறார்கள். பின்னர் பின்பக்கத்தால் சென்று விடுகிறார்கள்.

என்றாலும் யப்பான் அதிகாரிகளால் மகப்பேற்று நிலையம், 15 கட்டில் வசதிகளுடன் அமைக்கப்பட்டு எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கர்ப்பிணிகளின் வரவு அதிகரித்துள்ளது. இதனால் மகப்பேற்று நிலையத்தில் எமக்கு இடப்பற்றாக்குறை ஆரம்பித்துள்ளது.

மருதங்கேணிப் பகுதி, பளைப் பிரதேசம் உட்படத் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிகள், வைத்தியசாலைக்குப் பிரசவத்தற்காக வருகின்றனர். எனவே, இவ்வைத்தியசாலை மிக விரைவில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அதற்கு இன்று ஆரம்பிக்கப்படும் அபிவிருத்திச் சபை துரிதபங்களிப்பை ஆற்றவேண்டும் - என்று தெரிவித்தார்.

வைத்தியசாலையில் மீளப் புனரமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளராகப் பதவி வழியாக வைத்தியசாலை வைத்திய அதிகாரி செ.அம்பிகைபாகனும், தலைவராக ஓய்வுபெற்ற பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும் உப தலைவராக வைத்திய கலாநிதி சு.கி.அருளானந்தமும பொருளாளராகக் கிராமசேவை அலுவலர் வை. இராசரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர். 11 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அங்குரார்ப்பண நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன, சாவகச்சேரி தபால் நிலைய அதிபர் எஸ். தெய்வேந்திரன், வைத்திய கலாநிதி சு.கி.அருளானந்தம், தென்மராட்சி நலச் சேவைகள் சங்கச் செயலாளர் ஜெ.ஜெயக்குமார், அபிவிருத்தி நிறுவனப் பொறியியலாளர் எஸ்.திருக்குமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-31)

## ஈரவிழிகளில் ஈராண்டு நினைவுகள்

மண்ணில்
13
09
1942



விண்ணில்
18
11
2002

அமரர் அண்ணா இராஜேந்திரம் (B.A.Cey.)
(ஓய்வுபெற்ற பதிவாளர், மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

திதி: 25.11.2004

ஆறவில்லை எம்மனது ஆண்டுகள் இரண்டானதே!
தேறவில்லை எம்மனது தேற்றுகின்றோம்
தேடுகின்றோம் நாம் கிடைக்கவில்லை
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு - ஆனால்
"அப்பா" என்ற சொல்லுக்கு யாருமில்லை!

'மல்லிகை'
ஏழாலை மேற்கு, ஏழாலை.
(38787)(34-11-14-32)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 20 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
12
08
1938



விண்ணில்
25
11
1984

அமரர்
### சுப்பையா இராஜகஸ்தூரி
(கஸ்தூரி மாஸ்ரர்)

ஈர் பத்து ஆண்டுகள் உங்கள்
நினைவலையில் தவிக்கின்றேன் - அப்பா!
என்றும் அழியாத கற்சிற்பம் உங்கள்
பாசமிகு அரவணைப்பு - அப்பா!
அணையா விளக்காய் என்றும் எமது
நெஞ்சறைகளில் உங்கள் நினைவு - மாமா!
எமது மழலை மொழிகளை விண்ணில்
இருந்து செவிமடுக்கிறீர்களோ - அம்மய்யா!
மலர்தனை உலகமண்ணில் மலர்ந்தனை மாண்புடனே
நித்திய உறக்கத்தில் விண்ணுலகிலோ - நண்பா!

ஆறாத்துயரில்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள்,
உற்றார், உறவினர்.

இல.639, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(38811)(34-11-14-32)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
19
07
1922



உதிர்வு
09
11
2000

திருமதி பொன்னையா தங்கம்மா

சிந்தையில் கோயில் கொண்டு - உன்
சிரிப்பாலே எமைக் கவர்ந்து
இன்புற்றிருக்கையில் நீ இறையடி சேர்ந்தனையே!
சோகத்தின் உருவாய் ஆனோம்
சொல்லொணாத் துயரில் ஆழ்ந்தோம்!
வேகுதே நெஞ்சம் ஐயோ....!
ஐந்து ஆண்டுகள் என்ன ஐம்பது ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் - என்றும்
உங்கள் நினைவுகளுடன் இருக்கின்றோம்!

புலோப்பளை,
பளை.
(38853)(42-11-14-32)

பாசமுள்ள மகன்
பொ.பரமசாமி குடும்பத்தினர்.

## இடைவிலகிய மாணவரை பாடசாலையில் சேர்க்க நடவடிக்கை

பாடசாலைகளில் கல்விகற்று தமது கல்வியைத் தொடரமுடியாமல் இடைவிலகிய குருநகரைச் சேர்ந்த மாணவ - மாணவிகளை மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளை குருநகர் அறிவம் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

- இவ்வாறு தமது கல்வியைத் தொடரமுடியாமல் இடைவிலகியுள்ள மாணவ - மாணவிகள குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் முன்னால் உள்ள அறிவகம் அமைப்பின் பணிமனையில் தமது விவரங்களைத் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் பதிவுசெய்யலாம் என அறிவகம் அமைப்பின் இயக்குநர் சே. சுபைனஸ் தெரிவித்தார். பாடசாலையை விட்டு விலகமுன்னர் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றார்களோ அந்தப் பாடசாலையில் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடககம் இவர்கள் மீண்டும் சேர்க்கப்படவுள்ளனர் - என்று கூறப்பட்டது. (எ-51)

## சான்றிதழ்கள் கிடைத்தன

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் (2003) புனர்வாழ்வு புனரமைப்பு, அகதிகள் அமைச்சின் மனித வள அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்பட்ட வீட்டு மின் இணைப்பு, மரவேலை ஆகிய பயிற்சி நெறிகளில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ளன.

பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவில் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## முக்கிய அறிவித்தல்

18.11.2004 அன்று மதுபானச்சாலை உரிமையாளர்கள் அனைவரும் சேர்ந்து கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய மாவீரர் நாள்களான 26.11.2004, 27.11.2004 ஆகிய திகதிகளில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல மதுபானச்சாலைகளையும் பூட்டி எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(38860)
(24-11-14-32)
- மதுபானச் சாலை உரிமையாளர்கள்.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

### External Degree
**2005, 2006 பிரிவுகளுக்கானது**
**(Jaffna University)**

G.A.Q. | 1st inCom | B.A. | B.Com.

**Minimum Requirement G.C.E. A/L 3 Passes**
ஆரம்பம்: 04.12.2004

### CIMA
**Foundation level & Intermediate level**
*Madium English* *EXam May & November*
**Minimum Requirement G.C.E. O/L 3 (C) Passes**
ஆரம்பம்: 04.12.2004

### aat (SriLanka)
**Stage 1 & Stage 2**
*Madium Tamil & English* *EXam june & December*
**Minimum Requirement:** G.C.E. O/L 5 Passes or G.C.E. A/L 2 Passes
ஆரம்பம்: 04.12.2004

*Further Details:* **Director**
***Jaffna College Undergraduate Dept.***
464, Hospital Road, ( Near Commercial Bank), Jaffna.
(சி-39265)
(11-14-32)

## சாவகச்சேரி நகரசபை

**01.01.2005 முதல் 31.12.2005 வரை குத்தகைகள் சேவைக்கான**

### கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 07.12.2004
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 09.12.2004 காலை 10.00 மணி
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 09.12.2004 காலை 11.00 மணி

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்க முடியாதது |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தைக் குத்தகை | 11,00,000.00 | 5,000.00 | 200.00 |
| 02 | சாவகச்சேரி மீன் சந்தைக் குத்தகை | 176,000.00 | 1,000.00 | 200.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை NMS I | 120,000.00 | 1,000.00 | 200.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை NMS II | 120,000.00 | 1,000.00 | 200.00 |
| 05 | மாட்டிறைச்சிக்கடை NMS III | 180,000.00 | 1,000.00 | 200.00 |
| 06 | மாட்டிறைச்சிக்கடை NMS IV | 180,000.00 | 1,000.00 | 200.00 |
| 07 | துவிச்சக்கர வண்டித் தரிப்பிடக் குத்தகை | 50,000.00 | 1,000.00 | 200.00 |
| 08 | காலைக் குத்தகை | 20,000.00 | 1,000.00 | 200.00 |
| 09 | குப்பை கூளங்கள் அகற்றுவதற்காக உழவு இயந்திரத்தைப் பெட்டியுடன் வாடகைக்கு விடுதல் (நாளொன்றுக்கு) | - | 1,000.00 | 200.00 |

குறிப்பு:
- ★இறைச்சிக்கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகைகளைச் செலுத்த வேண்டும்.
- ★கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 15% பெறுமதி சேர்வரி மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- ★கேள்விப்படிவங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டை கொண்டுவர வேண்டும்.
- ★மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ★போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 23.11.2004
(சி-39271)(11-14-32)

# தேடுங்கள் வழி கிடைக்கும்

"எனது சொந்தமண் தெல்லிப்பழையில் உள்ள வறுத்தலைவிளான் என்னும் சிறிய கிராமம் எனது தந்தையார் த.சீவரத்தினம் தெல்லிப் பழை யூனியன் கல்லூரியிலே ஆசிரியராகக் கடமை ஆற்றியவர். தாயார் கிறேஷ். எனது குடும்பம் பாரம்பரியமாகக் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றி வரும் குடும்பம். அதனால், சிறுவய திலே கட்டுப்பாடும், கலகலப்பும் கலந்த சூழ் நிலையிலே நான் வளர்ந்துவந்தேன்.

சின்னவயதில் எனது தந்தையாரிடம் "எனக்கு ஏன் திவ்வியராணி எனப பெயர் வைத்தீர்கள்"? என்று கேட் பதுண்டு.

அதற்கு என் தந்தை யார், எதிர்காலத்தில் நீ ராணி ஆக வாழவேண்டும். அதேவேளை எதையும் தாங்குகின்ற, எதையும் கடந்து வாழ்கின்ற மனோபக்குவம் உனக்கு இருக்கவேண்டும்" என்று கூறுவார். அதன் பொருளை பின்நாளில் நான் ஆத்மார்த்தமாக உணர்ந்திருக்கின்றேன்". என்றார் திவ்வியராணி.

தனது பேரனால் நிறுவப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலே திவ்விய ராணி தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித் தார். க.பொ.த.உயர்தரத்தை தெல்லிப்பழை யூனி யன் கல்லூரியிலே தொடர்ந்தவர். தனது படிப் புக்காகத் தென்னிந்தியாவுக்குச் சென்றார். அங்கு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலே B.Sc (விஞ்ஞானமானி) பட்டத்தைப் பூர்த்தி செய்தார். அயராத கற்றலின் விளைவாக இன்று ஒரு முதுமாணிப் பட்டதாரியாக மிளிர்கின்றார்.

"B.Sc பட்டத்தைப் பூர்த்தி செய்ததும் கொழும்பு மகாராஜா தனியார் நிறுவனத்திலே எனது 24 ஆவது வயதில் பணியாளராக இணைந்து கொண்டேன். அங்கு ஆறு வருடங் கள் கடமை ஆற்றிய பின் 1972 இல் புன்னா லைக் கட்டுவன் தமிழ் மகாவித்தியாலயத்தில் எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அதன் பின் உயர்தர வகுப்புகளுக்கு கற்பிக்க வேண் டும் என்பதற்காக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றேன். அதன் பின் 1979 இல் இருந்து 1990 வரை வேம்படி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தேன். அந்த நாள்கள் பசுமையானவை. நாடகங்கள், போட்டிகள், விளையாட்டுக்கள் என்று சக ஆசிரியர்களோடும், மாணவர்களோ டும் மகிழ்ச்சிகரமாகவே கழிந்தது.

1990 களில் வலிகாமம் வடக்கு படை நட வடிக்கைகளுக்குப் பின் கொழும்பிற்கு வரும் போது எல்லாவற்றையும் இழந்து விட்டோமோ? என்ற மனநிலையே எனக்கு ஏற்பட்டது. வேலையை விட்டுவிடும் மனோ நிலைக்குக் கூட நான் தள்ளப்பட்டிருந் தேன். ஆனால், சிறுவயதில் தந்தையார் எனக்கு அளித்த அறிவுரைகளும், உளவியல் பற்றி நான் கொண்டிருந்த

**தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியர் கல்வித்துறைக்கான பிரதம செயற்திட்ட அதிகாரியாக பணியாற்றி வருபவர் திருமதி திவ்வியராணி சிதம்பரநாதன். பல்வேறு சோதனைகளுக்கு மத்தியில் சாதனை களைப் புரிந்து சவால்களை எதிர்கொண்டு சாதிக்கும் பெண்களுக்கு ஓர் உதாரணமாக விளங்கி வருகிறார். தேசிய கல்வி நிறுவகத் தில் பிரதம செயற்திட்ட அதிகாரியாக இரண் டாவது தடவையும் அமைச்சரவை அங்கீ காரத்துடன் தெரிவு செய்யப்பட்ட முதலாவது அதிகாரி என்ற பெருமையும் இவருக்கு உண்டு.**

**தன் வாழ்வில் சந்தித்தவற்றையும், சாதித்தவற்றையும் உதயன் வாசகர்களுக் காக மனந்திறந்து பகிர்ந்து கொள்கிறார்.**

கல்வியறிவும் என்னை எதிர்த்துப் போராடத்தூண்டியது. இந் தப் போராட்டம் எனக்குப் பெரிய வெற்றியை ஈட்டித் தந்தது" - என்கிறார் திருமதி திவ்விய ராணி.

"எனது மணவாழ்வில் ஏற்பட்ட குழப்பங் கள் என்னை மிகவும் கீழ்நிலைக்குத் தள்ளி யது. ஆனால், என் உளவியல் அறிவு குழந்தை கள் விளையாடுகின்ற 'சீஷோவையே' ஞாபகப் படுத்தியது. ஒரு பகுதி தாழ்ந்தால் நிச்சயம் ஒரு பகுதி உயரத்தான் வேண்டும். அந்த நேரத் தில் எனது சகோதரர்கள், நண்பர்கள் எனக்கு ஆதரவாக இருந்தார்கள். உடனடியாகவே கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியிலே ஆசிரியராக இணை ந்து கொண்டேன்.

அதேவேளை கொழும்பு தேசிய நிறுவகத்திலும் பகுதி நேர விரி வுரையாளராகவும் கடமை ஆற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது" - என்றார் அவர்.

தனது தனிப்பட்ட வாழ்வு பாதிக்கப்பட்ட போது பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள உறுதி எடுத்துக் கொண்டார் திவ்விய ராணி. தனது உயர்ச்சிக்காகக் கடுமையாகப் போராடினார். தேசிய கல்வி நிறுவகத்திற்கு உதவி செயற்திட்ட அதிகாரிகளை நியமிப் பதற்காகப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்ட பொழுது அதில் தோற்றி வெற்றிபெற்றார். பிறகு செயற்திட்ட அதிகாரியாகி இப்பொழுது ஆசிரி யர் கல்வித்துறைக்கான பிரதம செயற்திட்ட அதிகாரியாகக் கடமை ஆற்றுகிறார். இவரது சேவைக்காலம் முடிவடைந்த பொழுதும்கூட அவரது செயல்திறன் காரணமாக அமைசசரவை அங்கீகாரத்துடன் பதவி நீடிப்பும் செய்யப்பட் டுள்ளார். இவ்வாறு தேசிய கல்வி நிறுவகத் தில் அமைச்சரவை அங கீகாரத்துடன் பதவி நீடிப்பு செய்யப்பட்ட முதலாவது அதிகாரி இவரே ஆவார்.

'இப்பொழுது என் சிந் தனை எல்லாம் சேவை, சேவை, சேவை. எனது மக்களுக்கு எனக் குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி எதை, எதை

**செவ்வி:**
**ஆர்.மார்க் அன்ரனி**

செய்யலாமோ அதையெல்லாம் செய்வதற்குக் கடுமையாக முயற்சிக்கிறேன். 1990களில் ஆசிரி யர் பட்டக்கல்விக்காக கற்கை நெறிகள் தென் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அவற்றை எமது பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் நோக்கம் யாருக்கும் இருக்கவில்லை. இப்பொழுது உயர் அதிகாரிகள் என்னில் வைத்திருக்கும் நம்பிக்கை யைப் பயன்படுத்தி எனது கடின உழைப்பினூ டாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவு



னியா, கண்டி, கல்முனை, மட்டக்களப்பு, திரு கோணமலை, பதுளை, நுவரெலியா ஆகிய இடங்களில் எல்லாம் ஆசிரியர் பட்டக்கற்கை நெறிகளுக்கான மத்திய நிலையங்களை ஆரம பித்து உள்ளேன். இன்னும் எவ்வளவு செய்ய முடியுமோ? அதற்காக நானும் எனது சக அதிகாரிகளும் முயற்சித்து வருகிறோம்.




நான் பெண்களுக்கு சொல்வது இதுதான். எததனை பிரச்சினை வந்தாலும் சோர்ந்து விடா தீர்கள். உளவியல் நூல்களைப் படியுங்கள். அது உங்கள் போராட்டங்களுக்கு கைகொடுக் கும். ஒரு வழியில் நீங்கள் தாழ்த்தப்பட்டால் மற்றொரு வழியில் நீங்கள் உயர்வதற்கு வாய்ப்பு உள்ளது. நீங்கள் எப்படி பிரகாசிக் கலாம் என்பதை ஆராயுங்கள் - தேடுங்கள்... வழி கிடைக்கம்.. 'தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் தரப்படும்' என்பதை நான் உங் களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்'.

- என்றார் திவ்வியராணி. ☆

# சந்தியாவின் கடிதங்கள்



*பிரியமுள்ள பிரியாவிற்கு,*

உனது பதில் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

உன் கடிதத்தில் நீ சுயதொழில் செய்ய ஆசைப் படுவதாகவும் அதற்கான ஆலோசனைகளை கூறு மாறும் கேட்டிருந்தாய். அதற்கான ஆலோசனை களை இன்று எழுதுகின்றேன்.

'சுயதொழில்' என்பது புதுவிடயமல்ல. அன்று தொடக்கம் பெண்கள் வீட்டிலிருந்தபடியே அப்பளம் போடுவது. உடைகள் தைப்பது எனப் பல்வேறு தொழில்களைச் செய்து வந்துள்ளனர்.

இன்று பல பெண்கள் சுயமாக அழகுநிலையங்களைஅமைத்து சிகையலங்காரம். முக அலங்காரம் என அலங்கார வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். விழாக்களுக்கு வேண்டிய அலங்காரப் பொருள்கள். மலர் அலங்காரம் என்பவற்றைச் செய்கின்றார்கள். செடிகள் வளர்த்துவிற்கின்றார்கள். உணவு வகைகள் தயாரித்துப் பொதி செய்து விற்பனை செய்கின்றார்கள்.

தொழில் செய்ய என்ன தகுதி வேண்டுமென்று நீ கேட்டிருந்தாய். அதற்கு தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆர்வமே மூலதனம். தேர்ந்தெடுக்கும் தொழிலில் பிடிப்பு இருக்கவேண்டும். அப்பொழுது தான் அதில் முழுமனதுடன் ஈடுபடமுடியும். ஆரம்பக் கட்டத்தின் தோல்விகளை எதிர்த்து நிற்கும் மனத்திடம் வேண்டும்.

நீ தேர்ந்தெடுக்கும் தொழில் உனது திறமை. சுற்றுச்சூழல், இடவசதி. குடும்பவசதி என்பவற்றுக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

குறிப்பாக உன் வட்டாரத்தில் அதிகமாக - அவசியமாகத் தேவைப்படுவது எது?

உன்னால் அத்தேவையைப் புர்த்தி செய்ய முடியுமா?

அதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்க முடியும்?

எவ்வளவு பணம் முதலீடு செய்ய முடியும்?

உதவிக்கு ஆள்கள் கிடைப்பார்களா? என்பதையெல்லாம் முதலில் தெரிந்து கொண்டு அதன்படி உன்தொழிலை ஆரம்பித்துக்கொள்.

நீ ஒரு தொழிலை ஆரம்பித்து விட்டாயென்றால் உதாரணமாகத் தையல் தொழிலை நீ தெரிந்தெடுத்தால் அத் தொழிலுக்கென்று ஓர் அறையை தேர்ந்தெடுக்கவேண்டும். ஏனென்றால் நீ வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் போதும், வேலை செய்யும் போதும் குடும்பத்தின் மற்றைய உறுப்பினர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்கும். வேலைக்கு வேண்டிய பொருள்களை ஒழுங்காகவும் சரியாகவும் எந்நேரமும் வைத் திருக்கவேண்டும்.

வீட்டில் தான் வேலை என்றாலும் எப்படி உடை உடுத்துள்ளாய் என்பதும் முக்கி யம். மதிப்பு ஏற்படுத்தும் வகையில் எளிமையாக. சுத்தமாக உடை அணியவேண்டும்.

(எனது வீட்டுக்கருகில் தையல் வேலை செய்யும் பெண்மணி எந்நேரமும் அழுக் கான ஒரு சட்டையைப் போட்டுக் கொண்டு தலையையும் ஒழுங்காகக் கட்டாமலேயே இருப்பார். எத்தனை பேருக்கு அவரிடம் மீண்டும் போகத் தோன்றும்?)

மேலும். நமக்குக் கீழே வேலை செய்பவர்களிடமும் வாடிக்கையாளர்களிடமும் கனி வுடன் பழகுவதுடன் அனுசரித்தும் போகவேண்டும்.

வியாபாரத்திற்கு மிக முக்கியமான கொள்கையாக 'மற்றவர்களின் நேரத்தை விரயமாக்காமல் இருப்பதைக்' கடைப்பிடிக்க வேண்டும். ஒருவரிற்குப் 10 மணிக்குப் பொருள்களைக் கொடுப்பதாக வாக்களித்தால் குறித்த நேரத்திற்கு 2 நிமிடம் முன் பாகவே பொருள்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நம்பிக்கைத் துரோகம் செய்யாதே. பொய் சொல்லாதே. குறுக்கு வழியில் முயற்சிக் காதே. உனக்கென்று ஒரு உயர்ந்த இலட்சியத்தைத் தீர்மானித்துக் கொண்டு வியாபாரத் தைத் தொடங்கு வெற்றி நிச்சயம்.

*பிரியமுடன் சந்தியா.*

25. 11. 2004

# திருமணத்தில் 'தாலி'

கோவலன் கண்ணகி திருமணம் எப்படி நடை பெற்றது? இளங்கோ அடிகளார் கூறுகிறார்.

"மாலைதாழ் சென்னி வயிரமணித்தூணகத்து
நீல விதானத்து, நித்திலம்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ்ச கடணைய வாளத்துச்
சாலியொரு மீன்றகை யானைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ்செய்வது காண்பார்கணோன்
பென்னை"

வயிரமணித்தூண்களின் உச்சியில் மாலை கள் தொங்க! விடப்பட்ட மணிமண்டபத்தில் - நீலப்பட்டு பொண்டு மேல விரானததை அழகு படுத்திய முத்துப்பந்தலின் கீழ் - வானத்து அருந் ததி போன்ற கண்ணகி யைக் கோவலன மணந்து அவளுடன் தீயினை வலம் வந்தான். வயோதி கப் பார்ப்பனன் மறைவழிப் படி அத்திருமணம் நடை பெற்றது!



ஆனால், இத்திரு மணத்தில் கண்ணகி கழுததில கோவலன் தாலி அணிவித்ததாகத் தகவல இல்லை! மணமகன் - மணமகள் இருவரும் மாலை மாற்றிக் கொள்வதுடன் அத்திருமணம் பூர்த்திபெறுகிறது.

சுங்க காலத்தில் நடைபெற்ற தமிழர் திரு மணத்தில் கூட "தாலி"அணிவிக்கும் பழக்கம் இல்லை. பழந்தமிழர் திருமணத்தை முறை யாகச் சொல்லும் அகம் 86ஆவது பாடலில் நல்லாவூர்கிழார் "தாலி" யைப் பற்றிப் பேச்சே எடுக்கவில்லை!.

பொதுவாகத் தமிழர் திருமணங்களில் தால! அணிவிக்கும் முறை பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஏற்பட்டிருக்கிறது.

தாலியை மணமகள் கழுத்தில் அணி வித்தது, தாலி கட்டும் பொழுது மூன்று முடிச்சுகளைப் போடுவது, மணமகன் விழிப்பு நிலை, தூக்க நிலை, கனவுநிலை ஆகிய மூன்று நிலைகளிலும் நீதான் என் துணைவி, மனைவி, நான் உனது கணவன், துணைவன் என்பதனை அறிவிக் கவே அப்படி முடிச்சுகள் போடப்படுகின்றன.

திருமணப்பழக்க வழக்கங்களும, சம்பிர தாயச் சடங்குகளும், மனி தனை மனிதனாக மாற்று வதறகாகத்தான். துர திர்ஷ்டவசமாக ஒரு பெண் கணவனை இழந்து விடுவதாலேயே அப் பெண்ணிற்கு உரிய உரிமைகளை மறுப்பது, மதத்திற்கு மாசுதரும் செயலாகும்! மதப பழக்க வழக்கங்கள். "அன்பே கடவுள்" என்ற தத்து வததை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ❊

# பெண் மொழிகள்

☆ வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய உயர்ந்த பண்புகள் இல்லாத ஒரு இல்லத் தலைவி யைக் கொண்ட குடும்பம் மகிழ்வற்றுப்போகும்.

- வள்ளுவர்.

☆ பெண்களின் வாயை விட அவர்களின் கண்களே அதிகம் பேசும்.

- காண்டேகர்.

☆ ஒரு நல்ல பெண்மணியின் காலடியில் பழிச்சொற்கள் மடிகின்றன.

- ஸ்பானிய உரை

☆ மடிந்துபோன இதயங்களில் உயிர்ஊட்டுபவள் பெண்.

☆ கணவனே மனைவியின் முதல் குழந்தை.

- ஜபானின்.

# வாழ்க்கை

*போராடினால் பூக்காடு*
*சோம்பினால் சுடுகாடு*
*சலிப்பு எப்போதும்*
*சோகங்களை மட்டுமே*
*சுடுகாடு வரை*
*சுமக்க வைக்கிற*
*சூட்சுமம் செய்கிறது.*
*உழைப்பு*
*உன் முன்னால்*
*மலர்ப் படுக்கை விரித்து*
*மகிழ்விக்கிற*
*மகத்துவம் செய்கிறது*
*எதை நீ*
*எடுப்பதாய் எண்ணம்?*
*தீர்மானி*
*தெரிவு பொறுத்தே*
*இன்பமும் துன்பமும்.*

**கு.தவசீலன்**, விசுவமடு.

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2005

இக்கல்லூரியில் தரம் 6 இற்கான அனுமதி பெறவிரும்புவோர் காரியாலயத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று 10.12.2004 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

- அதிபர்.

(சி-39266)(34-14-44-26)


## மாவீரர் நாளை ஒட்டி திருமலையில் போட்டிகள்

திருகோணமலை,நவ.25

மாவீரர் நாளினை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் போட்டிகளான, உதைபந்தாட்டப் போட்டியும், வீச்சுக் கரப்பந்தாட்டப்போட்டியும் மக்கெய்சர் உள்ளரங்கில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் 30 கழகங்கள் பங்கேற்கின்றன. இதில் வெற்றி பெறும் கழகங்கள் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தவிருக்கும் கேணல் கிட்டு ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளும். (3)

## வழிகாட்டல் கருத்தரங்கு

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் இன்று தொடக்கம் 3தினங்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 9.30 மணிக்கு தமிழ் பாடத்திற்கும், பிற்பகல் 1.30 மணிக்கு சமூகக்கல்வி பாடத்திற்கும் - நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கணித பாடத்திற்கும், பிற்பகல் 1.30 மணிக்கு ஆங்கில பாடத்திற்கும் - எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9.30 மணிக்கு விஞ்ஞான பாடத்திற்கும் கருத்தரங்குகள் நடைபெறும். (10-202)


## யாழ்ப்பாணம் மாநகரசபை
### சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல் - 2005

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 2005-01-01 ஆம் திகதி முதல் 2005-12-31ஆம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 2004-12-07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்ட பிணைப்பணமும் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 300உம் பெறுமதிசேர் (வற்) வரியும் (15 %) செலுத்துவதன்பேரில் 2004-12-06ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிவரையும் யாழ்.மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் (இணைப்பிரதிகளில்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்களை, யாழ்.மாநகரசபையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிகளில் சேர்க்கப்படல்வேண்டும். அல்லது *மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்* என்ற முகவரியிட்டு, அரக்குமுத்திரை இடப்பட்ட உறையிலிட்டு 2004-12-07 செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்விப்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 2004-12-07 செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்குக் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்கமுடியும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

*குறிப்பு:*

1. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையின் 50% இற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாத முறி சமர்ப்பித்தல்வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்கள் சந்தைக்குவரும் பொருள்களின் பெறுமதியின் 3%இற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 2.00இற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 4.00இற்கும் மேலதிகமாகப் பாதுகாப்புவரி அறவிடக்கூடாது.
4. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கான மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.
6. ஜின்னா வீதியில் இருந்த இறைச்சிக்கடைகளுக்குப் பதிலாக மானிப்பாய் வீதியில் தனியார் காணியில் இறைச்சிக்கடைகள் நடத்த அனுமதி வழங்கப்படும். எனினும், இடத்தைக் குத்தகைக்காரரே தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
7. பாஷையூர் பகுதியில் உள்ள இறைச்சிக்கடைகள் இராணுவக் காவலரண்களுக்குள் அமைந்திருப்பதால் குத்தகைக்காரரே இடத்தைத் தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

### அட்டவணை

| தொ. இல. | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (15%பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பண்ணை மீன் சந்தை | 10000.00 | 169800.00 |
| 02 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10000.00 | 577900.00 |
| 03 | குருநகர் சந்தை | 10000.00 | 942700.00 |
| 04 | செங்குந்தா சந்தை | 10000.00 | 471550.00 |
| 05 | நாவாந்துறைச் சந்தை | 5000.00 | 157600.00 |
| 06 | பாஷையூர் சந்தை | 2500.00 | 39250.00 |
| 07 | அரியாலைச் சந்தை | 2500.00 | 66000.00 |
| 08 | புங்கங்குளம் சந்தை | 2500.00 | 16500.00 |
| 09 | கொழும்புத்துறைச் சந்தை | 1000.00 | 3300.00 |
| 10 | கஸ்தூரியார் வீதியிலுள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 2500.00 | 40550.00 |
| | **இறைச்சிக்கடைகள்** | | |
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 71500.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.04 | 2500.00 | 94600.00 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.05 | 2500.00 | 40700.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.06 | 2500.00 | 27650.00 |
| 05. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.08 | 2500.00 | 28050.00 |
| 06. | பண்ணை கருவாட்டுக்கடை இல.02 | 2500.00 | 22800.00 |
| 07. | பண்ணை கருவாட்டுக்கடை இல.03 | 2500.00 | 57450.00 |
| 08. | பண்ணை கோழிக்கடை இல.07 | 2500.00 | 38500.00 |
| 09. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 44200.00 |
| 10. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 56350.00 |
| 11. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 121150.00 |
| 12. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 107500.00 |
| 13. | புங்கங்குளம் மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 182305.00 |
| 14. | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 40004.00 |
| 15. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 38500.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 4000.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.03 | 2500.00 | 29450.00 |
| 18. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.04 | 2500.00 | 27500.00 |
| 19. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.05 | 2500.00 | 13550.00 |
| 20. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.06 | 2500.00 | 7650.00 |
| 21. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.07 | 2500.00 | 8100.00 |
| 22. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.08 | 2500.00 | 6100.00 |
| 23. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.09 | 2500.00 | 6100.00 |
| 24. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல.10 | 2500.00 | 6800.00 |
| 25. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.11 | 1000.00 | 3900.00 |
| 26. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.12 | 1000.00 | 3900.00 |
| 27. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.01 | 5000.00 | 155100.00 |
| 28. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.02 | 5000.00 | 110000.00 |
| 29. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.03 | 5000.00 | 110000.00 |
| 30. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.04 | 5000.00 | 122400.00 |
| 31. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.05 | 5000.00 | 214750.00 |
| 32. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.06 | 5000.00 | 222550.00 |
| 33. | குருநகர் ஆட்டிறைச்சிக்கடை இல.07 | 2500.00 | 10500.00 |
| 34. | நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை இல.01 | 5000.00 | 275000.00 |
| 35. | பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 70300.00 |
| 36. | பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 74800.00 |
| 37. | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 28600.00 |
| 38. | முஸ்லீம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 42450.00 |

23-11-2004

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-39267) (26-14-44)


## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.25

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (10-202)

## மரக்கன்றுகள் விநியோகம்

வலி.தெற்கு,நவ.25

மலைவேம்பு, வாகை, இலுப்பை, முதிரை போன்ற மரக்கன்றுகள் தமிழீழ பொருண்மியத்தினரால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ பொருண்மிய அலுவலகத்தில் இம்மரங்களைப் பெற்று மாவீரர் தினத்தை முன்னிட்டும் பிரதேச அபிவிருத்திக்காகவும் நட்டுப் பராமரிக்க ஏற்பாடு செய்யுமாறு பிரதேச சபைகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு பொருண்மியம் அறிவித்துள்ளது. (10-152)

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கான சேவல், பேட்டுக் குஞ்சுகள் விநியோகம் இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

கோழிக்குஞ்சுகள் தேவைப்படுவோர் கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் பதிவுசெய்யுமாறு கால நடை வைத்தியர் திருமதி மகிந்தராசா தெரிவித்துள்ளார். (10-117-202)

## மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 8 மாணவர்களுக்கு 'யுனிசெவ்' செயற்றிட்டத்தின்கீழ் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

இதற்கான வினாத்தாள்களை இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணி வரை சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களைக் கேட்டுள்ளார். (10-117-202)


## மாபெரும் புத்தக விற்பனை
### (நவம்பர் 22 முதல் 30 வரை)

நீண்டகாலமாக நீங்கள் எதிர்பார்த்திருந்த அரிய நூல்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், கல்விக் கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் அனைத்திற்கும் பயன்தரும் புத்தம் புதிய நூல்கள் அனைத்தும் தாமதமின்றி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வருட இறுதியில் வரும் வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்.

உங்கள் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 -222 2573.

(சி-39010) (26-14-44)



உ
சிவமயம்



### பருத்தித்துறை, வியாபாரிமூலை
## ஸ்ரீஅருளம்பல சுவாமிகள் சமாதி ஆலய
## புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம்

26-11-2004 வெள்ளிக்கிழமை

*அடியார்களே!*

காலை 6.00 மணிக்கு கணபதி பூஜை, மகா சங்கல்பம்
காலை 9.00 மணிக்கு மகா பூர்ணாகுதி
காலை 9.30 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கிரியாகால நிகழ்வுகள் தமிழ்நாடு சிவாகம வித்யா பாரதி வேதாந்த பி.ரி. அருணாச்சல கார்த்திகேயன் திருவண்ணாமலை அவர்களின் தலைமையின்கீழ் இடம்பெறும்.

ஆசியுரை: ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் *(ஆந்திரப் பிரதேசம்)*
சுவாமி சித்ரூபானந்தா
*(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)*
சிவஸ்ரீ வாசுதேவசர்மா
*(ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம், வியாபாரிமூலை)*

கௌரவிப்பு: *சிற்பாசாரியார் திரு.சொக்கலிங்கம்*
*செல்வம் சீர்காழி தாலுக்கா நாகபட்டணம்*

*அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து உய்திபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள்
அறக்கட்டளை.

(38923) (26-14-44)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 - 08 - 1921



மறைவு
07 - 12 - 2003

## முத்தன் பூதத்தம்பி

திதி: 25.11.2004

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய எங்களைக் கல்வியில் உயரவைத்த தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு முடிவடைந்துவிட்ட இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய வல்வை வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

சத்திரங்கை, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை,
T.P.077 6073772 (38922)(39-26-14-44)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.



## மரண அறிவித்தல்

### இராசையா செல்வரட்ணம்
(தெய்வேந்திரம் - வர்த்தகர்)



தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட இராசையா செல்வரட்ணம் (தெய்வேந்திரம்) 22.11.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25-11-2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணிக்குத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (38920)(26-14-44)

தகவல்:
இ.இந்திரராஜா,
த.கணேசமூர்த்தி.

## கரும்புலிகள் நினைவாலயம் இன்று திறந்துவைப்பு

மல்லாவி வணிகர்கழகத்தின் நிதியுதவியுடனும் ஒத்துழைப்புடனும் மல்லாவி நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவாலயம் இன்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நினைவாலயம் துணுக்காய் மல்லாவிப் பிரதேசங்களில் இருந்து வீரச்சாவடைந்த 15 கரும்புலிகளின் உருவப்படங்களைக் கொண்டதாகச் சிறப்பானமுறையில் அமைக்கப்பட்டுளளது. (8-322)

## மல்லாவிப் பொதுச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

மல்லாவிப் பொதுச் சந்தை நீண்டகாலமாகத் துப்புரவு செய்யப்படாத நிலையில் குப்பை கூளங்களும் புல்பூண்டுகளும் நிறைந்து காணப்படுகின்றன.

தொடர்ந்து பெய்யும் மழையினால் இப்பகுதி சேறும் சகதியுமாய் உள்ளது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்துபோகும் இச்சந்தை இவ்வாறு சுகாதாரமற்றுக் காணப்படுவதால் தொற்றுநோய்கள் பரவக்கூடும் என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். (8-322)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் மழை; 6ஆயிரத்து 768 குடும்பங்கள் இடம்பெயர்வு

புதுக்குடியிருப்பு,நவ.25

கடந்த சில நாளகளாகத் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார்6 ஆயிரத்து 768 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 771 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி வரையான பிரதேச செயலகங்களின் கணக்கெடுப்புப்படி புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 66 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 551 பேரும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 183 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 785 பேரும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 834 குடும்பங்களைச்சேர்ந்த 2 ஆயிரத்து 538 பேருமஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 474 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 427 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 211 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 520 பேரும் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

21 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்களின் விவரங்கள் கிடைக்கவில்லை.

இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ள மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், முல்லைத்தீவு மக்கள் நலன்புரிச் சங்கம், வர்த்தக சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் என்பன சமைத்த உணவு வகைகளையும் வேறு பல நிவாரணப் பொருள்களையும் வழங்கியுள்ளன.

இந்த இடம்பெயர்வு தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார் கருத்துத் தெரிவிக்கையில் -

இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென அரசிடம் 3.5 மில்லியன் ரூபாவைக் கோரியுள்ளதாகவும் இவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளதுடன், புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடரும் மழையினால் மக்கள் இடம்பெயர நேர்ந்ததுடன் மேலும் பல பாதிப்புக்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

மழை வெள்ளங்கள் தேங்கியுள்ளமையாலும் இடம்பெயர்ந்து பொது இடங்களில் வாழ்வதாலும் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயநிலை தோன்றியுள்ளது. அத்துடன், மழையினால் இரு குழந்தைகள் இறந்துள்ளதுடன் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததினால் சிறுமி ஒருவரும் படுகாயம் அடைந்துள்ளார்.

அப்பகுதியின் வீதிகள, காணிகள் அனைத்தும் வெள்ளக் காடாகக் காணப்படுவதால் சில இடங்களில் போக்குவரத்து முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சிறாட்டிக்குளம் பகுதிக்கான போக்குவரத்து கயிற்றுப் பாலத்தினூடாகவே இடம்பெற்று வருகின்றது.

சில கிராமங்களுக்கான தபால் சேவைகளும் வெள்ளம் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.(8-353-202)



கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வில் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் கருத்துரை வழங்குவதையும் இதில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். *(படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)*

## முல்லைத்தீவு செயலகத்தில் சிரமதானம்

முல்லைத்தீவு அரச செயலகம் நிக்கொட் நிறுவனத்தின் பணியாளர்களால் சிரமதானம் மூலம்துப்புரவு செய்யப்பட்டது.

தமிழீழத் தேசிய மாவீரர் தினத்தினை முன்னிட்டு பல இடங்களில் கொட்டும் மழையிலும் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரிந்ததே.

முல்லைத்தீவு நகரில் தமிழீழ போக்குவரவுக் கழகத்தினர், முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தினர், முல்லைத்தீவு நலன்புரிச் சங்கத்தினர், முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து அலம்பில் துயிலும் இல்லத்திலும் நகரைச் சூழவுள்ள பகுதிகளிலும் சிரமதானம் மேற்கொண்டனர். (8-353)




## மரக்கிளை முறிந்து வீழ்ந்து முல்லை.செயலகக் கட்டடம் சேதம்

தற்பொழுது பெய்துவரும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் உள்ள மலைவேம்பு மரத்தின் கிளை ஒன்று காற்றின் காரணமாக முறிந்து வீழ்ந்ததில் கட்டடம் பலத்த சேதம் அடைந்தது.

இந்தமரம் நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது எனவும் இதன் கிளைகளை அகற்றுவது மிகவும் கடினமானதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இதனைச் சாதாரணமாக மனித வலுவைக்கொண்டு தறிக்க முடியாது எனவும் இதன் கிளைகளை அகற்றுவதற்குக் கிரேன் போன்ற இயந்திரங்களைக் கொண்டுதான் அகற்றமுடியும் எனவும் அதற்குப் பெரும தொகையான பணம் தேவையாக உள்ளது எனவும் முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்தார். (8-353)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி கிளிநொச்சியில்

வட்டக்கச்சி,நவ.25

மாகாண சிறுவர் செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து முன்னெடுக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி கடந்த 19 ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவரும் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளருமான சி.சிவநாதன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் இ.ராஜன் ஆகியோர் முன்பள்ளிச் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

இப்பயிற்சியின், வளவாளராகத் தமிழ்மொழி பாட சேவைக்கால ஆலோசகர் திருமதி மலர்நாயகி கலந்துகொண்டார். மூன்று நாள் அமர்வாக நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் 25 ஆசிரியர்கள் பயிற்சியாளர்களாகக் கலந்துகொண்டனர். (8-405)

## ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன்!

மாவீரர் தினத்தையொட்டி துணுக்காய் பிரதேசத்திலுள்ள ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமைக்கப்பட்ட இத்துயிலுமி ல்லம் தற்போது 533 கல்லறைகளையும் 126 நினைவுக் கற்களையும் கொண்டுள்ளது. இத்துயிலுமில்லம் அப்பகுதி மாணவர்கள், வணிகர்கள், அரச நிறுவனங்கள், பொது அமைபுக்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சிறப்பானமுறையில் புனரமைக கப்பட்டுள்ளது. (8-322)

## முளைதிறனற்ற விதைநெல் விநியோகம்

துணுக்காய் கமநலசேவை நிலையத்தால் வழங்கப்பட்ட விதைநெல்லைத் தமது வயல்களில் விதைதத விவசாயிகள் அவை முற்றாகவே முளைக்காத நிலையில் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தரமான விதைநெல் என்று நம்பி உடன் பணம் கொடுத்து விதை நெல்லைக் கொள்வனவு செய்த நெற்செய்கையாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 100 புசல் நெல் இவ்வாறு வழங்கப்பட்டமையால் பல ஏக்கர் நெற்செய்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

இதுபற்றிக் கமநலசேவை நிலையத்தில் முறையிட்டபோதிலும், முளைக்காத நெல்லுக்குப் பதிலாக வேறு தரமான விதைநெல்லை வழங்கவோ அல்லது அதற்கான பணம் திருப்பிச் செலுத்தப்படவோ இல்லையென்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-322)






அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் ஆகிய போட்டிகளில் 3 ஆம் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி செல்வி பவித்ரா நவரட்ணராஜாவிற்கு, திருகோணமலை சென்.மேரீஸ் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது, வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்தின் துணைவியார் திருமதி தியாகலிங்கம் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

எம்மிடம் பாவித்த டிஷ் அன்ரனா (றிசீவர்) (KTV கார்டுடன்) வீடியோ டெக்குகள், எலக் ரோனிக் பொருள்கள் பலதும் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.சுரேஷ்குமார், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (காங்கேசன்துறை வீதி யில்). T.P.: 021 - 4590413. (38693)

தனியான பாவிப்பில் உள்ள LX 30 VAN விற்பனைக்குண்டு. தொடர்பு: சுதா, கே.கே. எஸ். வீதி (அழுத்தகத்துக்குப் பக்கத்து வீடு), மருதனார்மடம். (38924)

## கல்பேட்ஸ் விற்பனைக்கு

கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் விற்பனைக் குண்டு. கூடுதல் விலை கொடுப்போருக்கு முன் னுரிமை வழங்கப்படும். தொடர்பு: இல.19/1 A, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப் பாணம். (38917)

## பணிப்பெண் தேவை

குடும்பம் ஒன்றிற்கு இரண்டு குழந்தை களைப் பராமரிப்பதற்கு நேர்மையான, ஒழுக்க மான பணிப்பெண் தேவை. எதிர்பார்க்கும் சமபளம் வழங்கப்படும். தொடர்புகளிற்கு: விளம் பர இலக்கம் 2441, மே/பா உதயன். (38896)

## தவறிவிட்டது

சண்முகநாதன் ரதிகுலன் என்பவருடைய தே.அடையாள அட்டை (இல.810024119V) மற்றும் அடையாள அட்டைகள், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பன அடங்கிய பேர்ஸ் மருதனார்மடத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண் டெடுத்தவர்கள் "ஆனந்த அவனியூ", உடு வில், சுன்னாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0777 250848. (38915)

## ஆசிரியர் தேவை

பாலர் வகுப்பு படிக்கும் பிள்ளை ஒன்றிற்கு வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆசிரியர் தேவை. பெண் ஆசிரியர் விரும்பத்தக்கது. விரும்பிய சம்பளம் கொடுக் கப்படும். தொடர்புகொள்ளவும். விளம்பர இலக் கம்: 2442, மே/பா உதயன். (38897)

## ஒப்படைத்துதவவும்

கல்வியங்காடு, புலவனார் வீதியில் வீட்டில் இருந்து வீதிக்கு வந்த 2மாதம் நிரம்பிய பிற வுண் நிற பொமேரியன் நாய்க்குட்டியை நேற்று முன்தினம் தொடக்கம் காணவில்லை. இதனை அன்பாக வளர்த்த இரு சிறுவர்கள் மிகவும் கவலையுடன் உள்ளார்கள். தயவுசெய்து கருணை கூர்ந்து ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். ச.சதானந்தன், புலவனார் வீதி, கல்வியங்காடு. (சி-39273)

# மீனவருக்கு வள்ளங்கள்

கடற்றொழிலில் ஈடுபடுகின்ற வறுமைக்கோட் டிற்குட்பட்ட 3 மீனவர்களுக்கு ஒரு வள்ளம் என்ற அடிப்படையில் 40 மீன்பிடி வள்ளங்கள் மூவி மொண்டோ நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் ஆனைக்கோட்டை, சாவற் கட்டில் 5 வள்ளங்களும் அராலி மத்தியில் 10 வள்ளங்களும், அராலி கிழக்கில் 9வள்ளங் களும், அராலி மேற்கில் 7வள்ளங்களும் மூளாயில் 4வள்ளங்களும் அராலி தெற்கில் 5வள் ளங்களும் வழங்கப்படவுள்ளன. முதற்கட்ட நட வடிக்கையாக ஒரு தொகுதி வள்ளங்கள் கைய ளிக்கப்பட்டுள்ளன ஏனையவற்றை விரைவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (10-161)


We Serve

## மாபெரும் கண் மருத்துவ முகாம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல லயன்ஸ் கழகங்களும் இணைந்து யாழ்.மாவட்டத் தலைவர் லயன் க.மு.பத்மநாதன் தலைமையில் மாபெரும் கண்மருத்துவ முகாமை நடத்தவுள்ளோம்.

காலம்: நாளை (26-11-2004) வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
அன்றைய தினமே கண்பரிசோதித்து,
இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது.
கண்பரிசோதனை நடத்துபவர்கள் யாழ்.நகரின் முன்னணி நிறுவனங்களான

"சொலெக்ஸ்"
பல் மூக்குக் கண்ணாடியகம்,
516, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

"துஷா"
பல் மூக்குக் கண்ணாடியகம்,
544, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

விளம்பர அனுசரணை:
சொலெக்ஸ்
SOLEX OPTICAL 516, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
(26-14-44) (சி-39281)


## யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கம்
## விசேட கலந்துரையாடல்

காலம்: நாளை (26.11.2004) வெள்ளிக்கிழமை காலை 10.00மணி
இடம்: கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபம்
தொண்டர்களைப் பணிக்கு உள்வாங்குவதற்காக
உயர்மட்டப் பிரதிநிதிகள் வருகை தரவுள்ளனர்.
ஆகவே, அனைத்துப் பிரிவு தொண்டர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
யாழ்.மாவட்ட
சுகாதாரத் தொண்டர் சங்கத்தினர்.
(38927)(39-14-44-26)

## மாவீரர் தினத்தையொட்டிய நிகழ்வுகள்

குருநகர்,நவ.25

மாவீரர் தினத்தை முன்னிட்டு கொழும்புத் துறை, பாசையூர், குருநகர் மற்றும் நாவாந்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மாவீரர்களின் பெற் றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல 2.30 மணிக்குக் குரு நகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (10-51-202)

✦✦✦ ✦✦✦

யாழ்ப்பாணம், நவ.25

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தால் இன்று விசேட நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் மாவீரர் நினைவுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் கலாநிதி சு.மோகனதாஸ் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு மாவீரர் தின உரையை ஆற்ற வுள்ளனர். (10-12)

✦✦✦ ✦✦✦

வலி.வடக்கு, நவ.25

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட அரசியல் துறையினரின் அனுசரணையுடன் லெப்.கேணல் இம்ரான் - பாண்டியன் சிறப்புப் படையணியின் ஏற்பாட்டில் இன்று வியாழக் கிழமை தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சுப்பிரமணிய முருகன் ஆலய தெற்கு வீதியில் மேற்படி படையணி மாவீரர்களின் நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (10-86-202)

✦✦✦ ✦✦✦

மாவீரர் தின நினைவாகவும் தேசியத் தலைவரின் பிறந்தநாள் சிறப்பு நிகழ்வாகவும் யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத்துச் சேவைச சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரு பாலாருக்குமான சைக்கிளோட்டப் போட்டியும் மரதன் ஓட்டப்போட்டியும் நாளை வெள்ளிககிழமை காலை 6.30 மணிக்கு நல்லூர் ஆலய முன்றி லில் இருந்து ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகள் கடந்த 20ஆம், 21ஆம் திகதி களில் நடைபெறவிருந்து பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10-202)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14 - 08 - 1907
மறைவு 26 - 10 - 2004

### அமரர் சபாபதி நமசிவாயம்

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் நேசத்தின் அணிகலனாய்
எல்லோரும் விரும்பும் இன்முகத்தினராய்
பண்பு கலந்த இன்சொல் பேசும் உத்தமராய்
எம் மத்தியில் வாழ்ந்த அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் இனிய திருவுருவம்
எங்கள் நெஞ்சத்தை விட்டு மறையவே மறையாது
நினைவுகளும் நீங்காது நின்று நிலைத்திருக்கும்!
ஆத்மசாந்திக்காக ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி!

ஞானவைரவர் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(38930)(39-14-44-26) - குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவுகள்.......



இவ்வுலகில் 15 - 10 - 1944
இறையுலகில் 18 - 11 - 2002

### முருகேசு குணநாயகம் (MGM)

(காரைநகர் - பிரபல ஆயுள்வேத வைத்தியர்)
திதி:சதுர்த்தசி

**நினைவுகள் துன்பத்தைச் சுமந்த வண்ணம்.....**

உயிரைப் பறித்ததால்
உள்ளமதில் துன்பத்துடன்....
வாழ்நாள்கள் நகர்கின்றன- அப்பா!
இன்று வாசல் வழி வந்து வைத்தியர்
எங்கே என்ற கேள்விக்கு
வாயடைத்து நிற்கின்றோம் - அப்பா!
ஈராண்டுகள் ஆனாலும்.....
ஆறாது எம் துயரம்!

உங்கள் நினைவுகளுடன்:
திருமதி கு.நேசமலர் *(மனைவி)*,
செல்வி கு.கௌஷிகா *(மகள்)*,
செல்வன் கு.ரவிசங்கர் *(மகன்)*.

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.
(38933)(39-14-44-26)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 13 - 07 - 1931
மறைவு 27 - 11 - 2004

### அமரர் ஐயாத்துரை சண்முகம்

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியை நாளை (26.11.2004) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு பருத்தித்துறை திருநாவலூர் மகாமாரியம்மன் (எரிசம்யன் கோயில்) மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பா கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது இல்லத் தலைவரின் அமரத்துவச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்தி தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் துயர்பகிர்ந்து கொண்ட பரு.ஐக்கிய விளை யாட்டுக் கழகத்தினருக்கும் பளைப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினருக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

2ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
(38935) (26-14-44) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பரநிருபசிங்கம் நவரெட்ணம் (நவம்)

(C.T.B. நடத்துநா)

முதலாம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட பரநிருபசிங்கம் நவரெட்ணம் (நவம்) 23-11-2004 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரநிருபசிங்கம் மற்றும் இரத்தினபூபதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவராசமதியின் (மதி) அன்புக் கணவரும் உதயமலர் (கனடா), சிவகுமார் (சுவிஸ்), சோதிமலர் (சுவிஸ்), பிறேமினா (சுவிஸ்), சூரியகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பசுபதிநேசன் (கனடா), பத்மநாதன் (ஜேர்மனி), பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), ரவிசங்கர் (சுவிஸ்), ஜெயக்குமார் (சுவிஸ்), வினோதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகராஜா (வட்டக்கச்சி), தன பாலசிங்கம் (மட்டக்களப்பு), ஆனந்தி, செல்வராணி (சுவிஸ்), சோமாவதி (கனடா), தில்லைநாயகி (ஜேர்மனி), திருச்செல்வம் (இளைப்பாறிய ஆசிரியர்), மணிவாசம் (யாழ்ப்பாணம்), துரைராஜா (சுவிஸ்), புஸ்ப வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரோமியா, ஜோன், சானுகா, கேபின், கரிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு. (38934) (26-14-44)


## தேவை

தொலைபேசி இயக்குவதிலும்,
போட்டோப் பிரதி இயக்குவதிலும்
அனுபவமுளளவர்கள் தேவை.

தொடர்பு: மருதம்ஸ்
66, மணிக்கூட்டு கோபுர வீதி
(ஆஸ்பத்திரி முன்பாக),
யாழ்ப்பாணம்.
(38938)

## Vacancies



**Post 1: Hardware Technician**
Experience: 2 Yrs (min) in Hard ware and Software Installation, Networking and PC Maintenance

**Post 2: Demonstrator**
Qualification
At least 1 year working experience in a similar capacity or position. Fluency in English with excellent oral and written communication. Qualified women are encouraged to apply for the above position.

REMUNERATION
All positions would be entitled to attractive salaries
Please send your CV within 7 days with contact Telephone numbers and names and addresses of two non related referees to
Managing Director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kandarmadam, Jaffna

# தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள்

சங்கானை,நவ.25

வலி.மேற்குப் பிரதேசத்தில் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை இப்பிரதேச தனியார் நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

தேசியத் தலைவரின் பிறந்த தினமான நாளை வெள்ளிக்கிழமை சங்கானை வர்த்தக சங்கத்தினரால் சங்கானை பஸ் நிலையத்தில் அமைந்துள்ள வைரவர் கோயிலில் 50 கிலோ அரிசியில் பொங்கல் செய்து பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

❑ ❑ ❑

வலி.மேற்குப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினால் இப்பிரதேசத்திலுள்ள அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் கற்பித்தல் உபகரணங்களும் கேக் மற்றும் இனிப்பு வகைகளும் வழங்கப்படவுள்ளன.

தனியார் கல்வி நிறுவனங்கள் 2005ஆம் ஆண்டிற்கான தலைவரின் உருவப் படங்கள் பொறித்த நாள்காட்டிகளை அச்சிட்டு வழங்கவுள்ளன. (10-29-202)

❑ ❑ ❑

யாழ்ப்பாணம், நவ.25

தமிழீழத் தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கமும் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகமும் தலைவருக்கான நினைவுக் கேடயங்களை இன்று வழங்கவுள்ளன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் இருந்து இன்று காலை புறப்படவுள்ள குழுவினர், கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் இன்று காலை 10 மணியளவில் கேடயங்களைக் கையளிப்பர்.

பல்கலை. ஊழியர் சங்கத்தின் சார்பில் ஊழியர் சங்கத் தலைவரும் கல்வியியற் கல்லூரியின் சார்பில் மாணவர் பிரதிநிதிகளும் கேடயங்களை வழங்கவுள்ளனர். (10-12)

❑ ❑ ❑

கொழும்புத்துறை, நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்கப் பணிமனைக் கட்டடத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது. (10-30-202)

❑ ❑ ❑

மாதகல், நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாதகல் எழுச்சி ஏற்பாட்டுக் குழுவின் அனுசரணையுடன் தலைவரின் பிறந்ததினமான நாளை வெள்ளிக்கிழமை மாதகல் பகுதியில் 50 பானைகளில் பொங்கல் செய்து பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது. (10-95)

❑ ❑ ❑

நல்லூர், நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தினரால் மாவிலித்துறை பிடாரி அம்பாள் ஆலயத்தில் விசேட பொங்கலுக்கும் பிரார்த்தனைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (10-111-202)

❑ ❑ ❑

குருநகர், நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இவ்விசை நிகழ்வுடன் தமிழீழ விளையாட்டுக் கழகத்தினரின் வாணவேடிக்கைகளும் இடம்பெறவுள்ளன. (10-51-202)

❑ ❑ ❑

சாவகச்சேரி,நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு தென்மராட்சி அரசியல் துறை, தென்மராட்சி எழுச்சிப்பேரவை, மாவீரர் செயற்பாட்டுக் குழு என்பன இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 15 மாவீரர் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கவுள்ளன.

இத் திட்டத்திற்கு தென்மராட்சிப் பிரதேசத்தின் ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் 5 குடும்பங்கள் வீதம் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

❑ ❑ ❑

சாவகச்சேரி,நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு தென்மராட்சி அரசியல் துறை, மாவீரர் செயற்பாட்டுக்குழு மற்றும் எழுச்சிப்பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை கொடிகாமம் பஸ் நிலையப் பகுதியில் பிரயாணிகள் மற்றும் பொது மக்களுக்கு சிற்றுண்டிவகைகள் குளிர்பானங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.(10-31-202)

❑ ❑ ❑

சாவகச்சேரி,நவ.25

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேசத்தில் 150 வறிய முன்பள்ளிச் சிறார்களுக்கான வங்கிக்கணக்குகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

கோட்ட ரீதியாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கைதடிக் கோட்டத்திற்கான நிகழ்வு கைதடி ப.நோ.கூ.சங்க மண்டபத்திலும், சாவகச்சேரிக் கோட்டத்திற்கான நிகழ்வு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்திலும் கொடிகாமம் கோட்டத்திற்கான நிகழ்வு கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (10-31-202)

❑ ❑ ❑

யாழ்ப்பாணம்,நவ.25

சின்னமடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்ததினக் கொண்டாட்டமும் மாவீரர்களின்பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சின்னமடு பொதுமண்டபத்தில் மிக எழுச்சியாக நடைபெறவுள்ளதாத் தெரிவிக்கப்படுகின்றது. (8-12)

❑ ❑ ❑

யாழ்ப்பாணம்,நவ.25

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகத்தில் 50 மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு 49 மரக் கன்றுகளும் தலைவரின் பிறந்ததினமான நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு ஒரு மரக்கன் றும் நடப்படவுள்ளன.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பா.பவனிதனும் மாவீரர் குடும்பம் சார்பாக திருமதி சா.நாகராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

❑ ❑ ❑

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியத் தலைவர் என்ற நூல் வெளியீடும் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்ததின நிகழ்வும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கூட்டுறவாளர்கள் ஏற்பாடு செய்துள்ள மாவீரர்எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (10-5)

# துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் பெற்றோர்களுக்கு

வலி.வடக்கு,நவ.25

உடுவில் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களை மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைதது்ச் செல்வது சம்பந்தமாக உடுவில் பிரதேச அரசியல்துறையினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இணுவில் மத்திய கல்லூரி, கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார்கோயில், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் பஸ் நிலையம், ஏழாலை மகா வித்தியாலயம், புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவைப்பிள்ளையார் ஆலயம், குப்பிளான் விக்னேஸ்வரர் வித்தியாலயம், மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றில் இருந்து பெற்றோர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டிற்கு வெளியே உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் பெற்றோர்கள் காலை 8 மணிக்கு மேற்குறிப்பிட்ட இடங்களில் இருந்து அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள தீவகம், வடமராட்சி, தென்மராட்சி மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச செல்லும் பெற்றோர்கள் முற்பகல் 11 மணிக்கும் -

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் செல்லும் பெற்றோர்கள் பிற்பகல் ஒருமணிக்கும் மேற்கூறப்பட்ட இடங்களில் இருந்து அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மாவீரர்களின் பெற்றோர்களை உரிய நேரத்திற்கு உரிய இடங்களுக்குச் சமுகமளிக்கும்படி உடுவில் பிரதேச அரசியல் துறையினர் வேண்டியுள்ளனர். (10-86)

★ ★ ★

வலி.வடக்கு.நவ.25

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களை மாவீரர் துயிலும் இல் லங்களுக்கு அழைத்துச் செல்வது சம்பந்தமாக தெல்லிப்பழை பிரதேச அரசியல் துறையினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாயம், மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயம், அளவெட்டி அரசியல்துறை பணிமனை மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் ஆகியவற்றில் இருந்து பெற்றோர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டிற்கு வெளியே உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்ல உள்ள பெற்றோர்கள் காலை 7 மணிக்கும் யாழ்.குடாநாட்டிலுள்ள தீவகம், வடமராட்சி, தென்மராட்சி மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்லவுள்ள பெற்றோர்கள் முற்பகல் 11 மணிக்கும்-

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் பெற்றோர்கள் பிற்பகல் ஒரு மணிக்கும் மேற்கூறப்பட்ட இடங்களில் இருந்து அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மாவீரர்களின் பெற்றோர்களை மேற்கூறிய இடங்களில் உரிய நேரத்திற்கு சமுகமளிக்கும படி தெல்லிப்பழை பிரதேச அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (10-86)

# சுகாதார எழுதுநர்களாக உள்ளோர் மத்திய அரசின் கீழ் இடமாற்றம்

குருநகர்,நவ.25

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இயங்கும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகங்கள் மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்திய சாலைகளில் சுகாதார எழுதுநர்களாக (Health Clerk) சேவைபுரிபவர்கள் மத்திய அரசின் கீழ் (Line Ministry) இடமாற்றம் செய்யப்பட உள்ளார்கள் என வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ரத்னாயக்கா மாகாணத்தில் இயங்கும் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அலவலகங்களில் சுகாதார எழுதுவினைஞர்களாக கடமைபுரிபவர்களிடம் இடமாற்ற விண்ணபப்ப்படிவ மூலம் இடமாற்றத்துக்கு விண்ணப்பம் செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கும்படி மாகாணத்தில் இயங்கும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களை இக்கடிதம் மூலம் அவர் அறிவுறுதியுள்ளார். (எ-51)

# வில்லூன்றி மயானத்தை புனரமைக்க யாழ்.மாநகரசபை நடவடிக்கை

கொட்டடி வில்லூன்றி மயானத்தைப் புனரமைக்க யாழ்.மாநகர சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று ஆணையாளா கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்படி மயானம் மாநாகரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவந்ததுடன் அதனை நிர்வகிக்க நிர்வாக சபையொன்றும் செயற்பட்டுவந்தது. 95 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்நிர்வாக சபையின் செயற்பாடுகள் சீர்குலைந்துபோயுளஎன.

இந்தநிலையில் இறந்தவர்களின் சடலங்களை மக்கள் தம்பாட்டில் தகனம் செய்து வருகின்றனர். இதனால் கொட்டடிப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மாநகரசபையிடம் முறையிட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில்கொண்டே இப்பகுதி மக்களின் அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு மயானத்தை மீண்டும் மாநகரசபை பொறுப்பேற்று முதற்கட்டமாக அதற்குரிய நிர்வாகசபையைத் தெரிவுசெய்து அதன்மூலம் இம் மயானத்தை புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (10-13)

# யுவதியுடன் சேஷ்டை புரிந்த முதியவர் நையப்புடைப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

இளம் யுவதி மீது அங்கசேஷ்டை புரிந்ததாகக் கூறப்படும் முதியவர் ஒருவர் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுக்க வந்த 17வயது மதிக்கத்தக்க யுவதி மீது வைத்தியசாலையில் பணிபுரிபவர் எனக்கூறப்படும் முதியவர் ஒருவரே அங்க சேஷ்டை புரிந்தவராவர்

யுவதியின் கூக்குரலைக் கேட்டு அவ்விடத்திற்கு விரைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் அவரை நையப்புடைத்ததுடன் யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைததனர். (10-13)

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் புள்ளிகள்

## அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு!

காரைதீவு,நவ.25

அடுத்த ஆண்டு முதல் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் புள்ளியும் இடம் பெறவுள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான பிரிவின் உதவிப்பரீட்சை ஆணையாளர் ஜீ.எஸ்.சொலமன் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் கல்முனை மமூத் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற செயலமர்வு ஒன்றில் உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தேர்ச்சி மட்டத்தை அறிமுகப்படுத்தினோம். அதன் பின்னர் பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளும் அதிகரித்து வருகின்றன.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் சித்தயடைவோரின் வீதம் படிப்படியாக அதிகரித்து வருவதைக் கடந்த வருடங்களின் பரீட்சை முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. அத்துடன் உயர்தர வகுப்பிற்குச் செல்வதற்கு கணிதம், தாய்மொழி போன்றவற்றில் போதுமான சித்தி இல்லாத பட்சத்தில், இந்தப் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தேர்ச்சி மட்டம் கவனத்தில் கொள்ளப்படுகின்றது- என்றார். (8-202)

# சாயி சிந்தனை

## அனைவரும் இறைவனின் குழந்தைகள்



நீங்கள் வசிக்கும் வீடு அசிங்கமாக இருக்கும் சமயங்களில், எவராவது உங்கள் வீட்டிற்கு வந்தால், உங்களுக்கு எவ்வளவு அவமானமாக இருக்கும்? அதேபோல் நீங்கள் வசிக்கும் இந்தத் தேசத்தில் மாசடைந்த மனம், அபவித்ரமான குணங்கள், இருந்தால் நீங்கள் ஏன் வெட்கப்படுவதில்லை என்பது எனக்குப் புரியவில்லை. நீங்கள் அணியும் உடை அழுக்காக இருந்தால் அவமானப்படவேண்டியதில்லை. உங்கள் இதயம் மட்டும் பவித்ரமாக இருக்கவேண்டும். நீங்கள் இறைவனை அடையவேண்டும் என்று பரிதவிக்கிறீர்கள்? அப்படி என்றால் நிர்மலமான ப்ரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள். தவறாமல் இறைவனைக் காணமுடியும்; இறைவனுடன் இணையமுடியும். திவ்யமான ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். கன்றுக் குட்டியைக் கண்டவுடனேயே தாய்ப்பசுவின் மடி நிரம்பிவிடும். அதேபோல, நிர்மலமான ப்ரேமையுடன் கூடிய, சுயநலமற்ற பக்தனைக் கண்டவுடனேயே, இறைவன் ஞானம் என்ற பிரசாதத்தை அளித்திடுவான். உங்கள் அண்ணன் தம்பி, அக்கா, தங்கையர் ஆகாரமில்லாமல் தவித்தால் நீங்கள் சகித்துக் கொள்வீர்களா? அனைவரும் இறைவனின் குழந்தைகளே. எனவே, திக்கற்று தீனர்களாகத் தவிக்கும் மக்களுக்கு உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள். ஜாதி, மத பேதங்களை விடுத்து அனைவரையும் சமத்துவத்துடன் நோக்குங்கள்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## தலைவா!

## இறை அருளால் நீடூழி வாழி!



வலம்புரியின் முத்தென்ன வையகம் வந்தாய்
வாகுபெற தாய் மடியில் தவழ்ந்துமே
வளர்ந்தாய்
கோமானே பிரபாகர எனும் நாமம் பூண்டாய்
தலம் யாவும் கொண்டாடும் (த.வி.புலிகள்)
இயக்கத் தலைவனாகத்
தகைமை பெறு கீர்த்தி பலவுங் கண்டாய்
நிறை புகழோடகவை ஐம்பதென்ன
நிறைகுடம் போல் இறை அருளால்
நீடூழி வாழி!!

(சி-39285)(26-33-14-45) - **வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சங்கீத ஆசிரியை செல்வி ஜெயகௌரி பாலநாதன் அவர்களின் பாசமிகு சகோதரன்

## பாலநாதன் ஜெயசீலன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கிளி./புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.* (38942)(14-45-33-42)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## பிரியாவிடை வைபவம்

குருநகர்,நவ.25

யாழ். பிரதி மாகாண சுகாதாரச் சேவைகள் அலுவலகத்தில் சேவை புரிந்து அண்மையில் இடமாற்றத்தில் சென்ற ஊழியர்களுக்கான பிரியாவிடை வைபவம் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் பிற்பகல் 3.30 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறும். (8-51)

## மாநகர சபை - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

**பின்வரும் வேலைக்கான கேள்வி என்னால் கோரப்படுகின்றது.**

**யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள 1310 அடி நீளமுடைய அரைச்சுவருக்கு மேல் கம்பி (கிறில்) வேலி அமைத்தல்.**

**விண்ணப்பங்களை 08.12.2004 பி.ப. 1.00 மணி வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**மீளளிக்கப்படாத விண்ணப்பக்கட்டணம் ரூபா 500/- (வற் வரி நீங்கலாக).**

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 08.12.2004 பிற்பகல் 2.30 மணி.**

**கேள்வி திறத்தல் 08.12.2004 பி.ப. 3.00 மணி**

**விண்ணப்பங்கள் யாவும் தபால் உறையில் இட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும்.**

**மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

*மாநகரசபை, யாழ்ப்பாணம். 24.11.2004* (சி-39282)(14-45-33)

**கலாநிதி க.குணராசா**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**


## இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா !

A/L தகமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visa க்களைப்பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் BSc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப்பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.

BTEC HND
World Class Qualifications



F.C. நிருஷன்
யாழ்ப்பாணம்

இடம்பெயர்ந்த பின்னர் நானும் எனது பெற்றோரும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறினோம். அந்தவேளையில் எனது எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருந்தது. IIS நிறுவனத்தில் இவ் HND கற்கை நெறியில் இணைந்ததன் மூலமாக நிச்சயமான எதிர்காலம் ஒன்றினை உறுதிப்படுத்தியுள்ளேன்.

Delivered Locally....... Recognised Globally

BSc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK,USA,Australia,Canada etc

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

GCE A/L
with 2 Subjects



S. மிதுனாளினி
மீசாலை

உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் அனுமதிகிடைப்பது கடினமாக இருக்கின்ற இந்தவேளையில் சர்வதேச தரம் வாய்ந்த Degree யை HND கற்கைநெறி மூலமாக யாழ்ப்பாணத்திலேயே பெறமுடிந்துள்ளது. இது எமக்கு IIS நிறுவனம் உருவாககித்தந்த மிகப் பெரிய வாய்ப்பு ஆகும்.

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

edexcel INTERNATIONAL
Approved Training Centre

INSTITUTE OF INFORMATICS STUDIES
# 100, Clock Tower Road, Jaffna.
P No. : 021 222 2831 / 021 222 6933


## நிறுவுநர் நினைவுநாள்

மாதகல்,நவ.25

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய நிறுவுநர் நினைவுநாளும் பரிசுத்தினமும் எதிர்வரும் 28ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அதிபர் அ.பேரம்பலம் தலைமையில் வித்தியாலயத்தின் ஏழூர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் சிறப்பு விருந்தினராகத தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிபபாளர் ச.கைலாசநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதி அதிபர் ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார். (10-95)

## மகளிருக்கு பயிற்சி நெறிகள்

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சிப் பிரதேச யுவதிகளுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பயிற்சிகள் பிரதேச செயலகத்தினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எட்டாம் வகுப்பில் சித்தியடைந்த 18 வயதுக்கு மேற்பட்ட யுவதிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை அந்தந்தக் கிராம அலுவலரின் சிபாரிசுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டுக்கான பயிற்சிகள் கைதடியில் நடத்தப்படவுள்ளதாகவும் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புக்களில் மனையியல், தையல், சிகை அலங்கரிப்பு, விவசாயம், கைவினை ஆகிய பயிற்சிகள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளன. (10-117)

## நிவாரண முத்திரை விநியோகம்

தென்மராட்சி,நவ.24

எழுதுமட்டுவாழ் தெற்குப்பகுதி மக்களுக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் -

இடம்பெயர்ந்து ஏனைய பிரிவுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் நிவாரண முத்திரையினைப் பெற்றுக்கொள்ளுமாறும் - கிராம அலுவலர் பொ.நவரத்தினராசா கேட்டுள்ளார். (10-117)

## ஆண்டிறுதிப் பரீட்சைகள்

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆண்டிறுதிப் பரீட்சைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.

தரம் 6,7,8,10 ஆகிய வகுப்புகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும்29 ஆம் திகதியும் -

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சைகள் அடுத்தமாதம் முதலாம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன. (10-117)

## அரியாலைப் பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

வலி.வடக்கு,நவ.25

அரியாலை மத்தி தெற்குப் பிரதேசத்தில் 65 லட்சம் ரூபா செலவில் நிக்கொட் நிதியுதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

கிராம புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் ஒருபகுதியாக அரியாலை மத்திதெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கலைவாணி சனசமூக நிலையம் நான்கு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் முன்பள்ளியும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இப்பகுதியில் முன்பள்ளிகள், பொது மண்டபம், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் என்பன அமைத்தல் மற்றும்பயன் தரு மரங்களை விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (10-86)

## தமிழர் புனர்வாழ்வுக்கழக உபபணிமனை திறப்பு

வலி.வடக்கு,நவ.25

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் உப பணிமனையொன்று அரியாலை மத்தி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் க.ஜெயராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நிக்கொட் உதவித் திட்டப் பணிப்பாளர் என்.நவரத்தினராசா விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். (எ-86)

# சேவைநலன் பாராட்டு



**சேவை விவரம்**

13.08.1975 - முரசுமோட்டை முருகானந்தா ம.வி.
22.02.1977 - கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை
01.01.1979 - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
01.02.1984 - கொழும்புத்துறை இந்து ம.வி.
01.01.1987 - மாவட்ட ஆசிரிய ஆலோசகர்.
25.11.2004 - ஓய்வு

## திரு.சோமசுந்தரம் சபாநந்தன்

**ஆசிரிய ஆலோசகர் (தொழில்நுட்பம்)**

**யாழ்ப்பாணம் - கல்விவலயம்**

12 வருடங்கள் ஆசிரியர்களாகவும் 17 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றி இன்று ஓய்வுபெறும் எமது சக ஆசிரிய ஆலோசகர் அவர்கள் சகல வளங்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய ஆலோசகர் கழகம்,
(33948) (43-14-16) வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## யாழ். லயன்ஸ் கழகமும்

J/80 யாழ். மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும்

## கண்சிகிச்சை முகாம்

இடம்: சயன்ஸ் ஹோல், கன்னாதிட்டி.
காலம்: 25.11.2004

S.M.Fernando ஸ்தாபனத்தாரினால் கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
மேற்படி பரிசோதனையில் மூக்குக் கண்ணாடி தேவை என இனம் காணப்படும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களிற்கான மூக்குக் கண்ணாடிகள் பிறிதொரு தினத்தில் இலவசமாக வழங்கப்படும்.

தலைவர்
(சு-39299) (43-14-16) யாழ்.லயன்ஸ் கழகம்.

## கண்டவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்



ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தேவராசா அன்ரனி டெல்சன் (வயது26) என்பவரை 05.11.2004 முதல் காணவில்லை. தயவு செய்து இவரைக்கண்டவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.
T.P.:021 222 5791
(38947) (43-14-16)

# துயர் பகிர்தல்

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் பிரசார செயலாளரும்
யா/கோப்பாய் மகாவித்தியாலயத்தின் அதிபருமான
அ.அகிலதாஸ் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி அருணாசலம் மகேஸ்வரி

அவர்கள் காலமாகிய செய்தி அறிந்தோம். அவர்தம் குடும்பத்தவர்கள், உறவினர்கள் துயரத்தில் நாமும் பங்குகொள்கின்றோம். குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்
(38946)(29-14-16-43) (வடமாகாண அதிபர் சங்கம்).

# கண்ணீர்க் காணிக்கைகள்



குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு.க.சின்னராசா அவர்களின் அன்புத் தாயார் திருமதி

## கதிர்காமு தெய்வானை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
(38952) (43-11-16) குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம்.

# மரண அறிவித்தல்

## கணேசலிங்கம் விசாலாட்சி

பழைய வீதி, கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் விசாலாட்சி அவர்கள் 24.11.2004 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.11.2004 பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
பெ.கணேசலிங்கம் (கணவர்),
(இளைப்பாறிய கூட்டுறவு முகாமையாளர், அச்சுவேலி).
(38956)

# மரண அறிவித்தல்

## கந்தையா நாகலிங்கம்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகலிங்கம் 23.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லாச்சி தம்பதியினரின் மூத்த மகனும் வைரமுத்துவின் சகோதரரும் காலஞ்சென்ற ஆசாரி நாகமுத்துவின் மருமகனும் காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளையின் பெறாமகனும் அராலி மேற்கைச் சேர்ந்த அப்புத்துரை - செல்லம்மாள் தம்பதிகளின் மூத்த மருமகனும் ஜெயநாதன், மகேஸ்வரன் (சுவிஸ்), புவனேஸ்வரி, சரஸ்வதி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராசா, பஞ்சலக்சுமி-(சுவிஸ்), மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகதாஸ் தமிழினி (சுவிஸ்), குகதாஸ் (கனடா), சிவஜா (சுவிஸ்), ராமதாஸ் (சுவிஸ்), அமரர் கௌரிசங்கர், அமரர் விஜயரூபி, ஜெயரூபன், ஜெயசித்ரா, கௌசலா, ஜெயானந்தன், துஸ்யந்தி, ஜெகரூபி, ஜெசித்தன், சயந்தன், ரெஜிதா, ஜசிதா, விஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூணாவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (சி-39297)

தகவல்:
பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
உயர்திரு. அ.அகிலதாஸ்
அவர்களின் அன்புத் தாயார்

## அருணாசலம் மகேஸ்வரி

அவர்களின் பிரிவால் துயருறும் அதிபர் குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்கள்,
யா/கோப்பாய்
(38954) மகாவித்தியாலயம்.


**லக்ஷ்மி சினிமா** இணுவில்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநேர வெளியீடாக சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்

**மன்மதன்**



தினசரி: 11.00, 3.00, 7.00, 10.00 புதிய நேரம்

பதிவு ஆசனம்: 0776592008 (38480)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது 2 ஆவது வெற்றிவாரம் காட்சி நேரம்:
தனுஷ், பிரியா நடித்த **ட்ரீம்ஸ்** (ரீல்ஸ்) 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே.)



வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக **RAMBO-3**
(சி-39052)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல் சத்தியராஜ், வடிவேல் நடித்த **தவுண் பாட்டி** (ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) **RAMBO - 3**

**ராஜா** யாழ்ப்பாணம்

அஜித் + அஜித், பூஜா நடித்த
**அட்டகாசம்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38750)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்



தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)



# லக்ஷ்மி ஏஜென்சி

**S-Lon - DISTRIBUTORS FOR JAFFNA**

## பதவி வெற்றிடம்

சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்

**தகைமை:**
அ. பாதுகாப்புச் சேவையில் பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய அனுபவம்
ஆ. நல்ல தேகாரோக்கியமும் கண்பார்வையும் இருக்கவேண்டும்.
இ. வயது 45 வயதிற்கு மேல்

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:**
அ. கிராம அதிகாரியின் சான்றிதழ்
ஆ. தேசிய அடையாள அட்டை
இ. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
ஈ. கல்விச்சான்றிதழ்கள்
உ. வேலை அனுபவச் சான்றிதழ்

☞ சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எமது அலுவலகத்திற்கு 26.11.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குச் சமுகமளிக்கவும்.

23/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-39296)(29-11-16-43)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கருணாமூர்த்தி

**(மக்கள்கடை - உரும்பிராய்)**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா கருணாமூர்த்தி 23.11.2004 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அருமை மகனும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் இரத்தினேஸ்வரியின் மருமகனும் நாகேஸ்வரி (ஈசு-ஜேர்மனி) அன்புக் கணவரும் ஜேர்மனியில் வசிக்கும் தமிழரசி, கலையரசி, ரஸ்மியின் பாசமிகு தகப்பனாரும் சசிகரன் (ஜேர்மனி), மதீபன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சத்தியமூர்த்தி, ஈஸ்வரமூர்த்தி, கணேசன் சக்திமலர், சிறீஸ்கந்தபாலன் சிவமலர், யோகமூர்த்தி, குமாரமூர்த்தி, ஸ்கந்தமூர்த்தி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

"கலா பவனம்"
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (38955)(43-11-16)

தகவல்:
இரத்தினேஸ்வரி (மாமி).

## திருமதி கதிர்காமு தெய்வானை



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமு தெய்வானை அவர்கள் நேற்று (24.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமுவின் அன்பு மனைவியும் அருணாசலம் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் மார்க்கண்டு, சின்னராசா (கூட்டுறவு பரிசோதகர்), கந்தையா (R.D.O) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி, இராசையா, புஸ்பம், நாகேஸ்வரியம்மா (மருந்துக்கலவையாளர்), அனுசலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பவகுமார் மற்றும் திலக்குமார் (சுவிஸ்), புஸ்பகுமார் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), தங்கராணி (கனடா), கலாராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் மகேந்திரன் (கனடா), தங்கவேல் (பிரான்ஸ்), தயாளன் (சுவிஸ்), உதயவேணி, ரவி (லண்டன்), சுகுணன் (டென்மார்க்), றஜீபன் (யாழ்.பல்கலைக்கழகம்), றஜனி, றஜீனா, கிஸ்காந்தி, மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*
(38945)(43-11-16)

தகவல்:
க.அருணாசலம் (மகன்)

## இளையதம்பி சிவசம்பு

**(மகாதனை தெல்லிப்பழை)**



மகாதனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவசம்பு 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இளையதம்பி தம்பதிகளின் அன்பு மகனும் சுந்தரம் தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் இந்திராணி (பிரான்ஸ்), செல்வராணி (தெல்லிப்பழை), உதயகுமார் (பிரான்ஸ்), புஸ்பராணி (நோர்வே), சரோஜினிதேவி (திருநெல்வேலி), இரஞ்சிதமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஜெயகாந்தன் (பிரான்ஸ்), குமாரசுவாமி (தெல்லிப்பழை), இராஜினி (பிரான்ஸ்), தயாபரன் (நோர்வே), பாலராஜா (திருநெல்வேலி), ஞானசேகரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாளினி, மிராளினி, செந்தூரன், மயூரன், வேணுஜா, அகல்யா, தர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2004) வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு சைவப்பாடசாலை ஒழுங்கை, திருநெல்வேலியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சைவப்பாடசாலை வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (38953)(43-11-16)

தகவல்:
இ.பாலராஜா (மருமகன்),
J.B.R. பிக்கசர் பலஸ்

## காதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றுக்கு உத்தரவிட்டது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

சமுர்த்தி நிதியைக்கையாண்ட விதம் தொடர்பில் கைது செய்யப்பட்டு கொழும்பு நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் காதர் ஹாஜியார் என்பது தெரிந்ததே. (எ-க-6)

## ஏற்றிய கொடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டன.

பின்னர் பிற்பகல் 3 மணியளவில் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இணக்கப் பேச்சு நடைபெற்றது. கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுடன் தள்ளாடிஇராணுவப் பிரிகேடியர், பொலீஸ அத்தியட்சகர், புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், விநோ விநோதராதலிங்கம் மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சை அடுத்து புலிக்கொடியை நிகழ்வு ஏற்பாட்டாளர்களிடம் மீள ஒப்படைக்கப் பொலீஸார் இணக்கம் தெரிவித்தனர். எனினும், இந்த விவகாரம் தொடர்பாக இருதரப்பினரும் தமது தலைமைகளுடன் பேசிய பின்னர் இன்று மீண்டும் பேசுவது என்று தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில், நேற்றுமாலை பொலீஸாரால் புலிக்கொடி மீள ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிக்கொடியை ஏற்ற வேண்டாம் என்றும் - ஏற்றிய கொடியை இறக்குமாறு பலதடவை கூறப்பட்டது என்றும் - அதனை மீறி நடந்ததாலேயே புலிக்கொடி இறக்கப்பட்டது என்று - அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## வந்தாறுமூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தார்.

வீடுகளிலிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் ரி-56 ரகத் துப்பாக்கியினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

இருவரது சடலங்களும் தற்போது செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஏறாவூர்ப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கில் அண்மைக்காலமாக இத்தகைய சூட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுவருவது தெரிந்ததே. (எ-க-6)

## வெள்ளி முதல் இருதினங்கள் மதுபானசாலைகள் மூடியிருக்கும்

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் மாவீரர் தினத்தை முன்னிட்டும் நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் குடாநாட்டில் உள்ள சகல மதுபானசாலைகளும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி யாழ். பல நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற மதுபான உரிமையாளர்களின் கூட்டத்தில் இந்தத் தீமானம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ)

## சொல்ஹெய்ம் அடுத்தமாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்ஹெய்ம் லண்டனில் சந்தித்துப் பேசுவார். பிரபாகரனின் உரையில் உள்ள முக்கிய விடயங்கள் பற்றியும் சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து அவர் தெரிவித்துள்ள கருத்துக்களையும் அச்சந்திப்பில் சொல்ஹெய்முக்கு பாலா விளக்குவார்.

அந்த விளக்கங்களைப் பெற்றுக்கொண்டு அடுத்த மாதம் 6ஆம் திகதி சொல்ஹெய்ம் கொழும்புக்கு வருவார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உட்பட முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து அவர் பேசுவார்.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாகத் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்நகர்த்தும் நோக்கோடு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனை ஜனாதிபதி இந்த மாத ஆரம்பத்தில் அழைத்திருந்தார்.

அரச தரப்பினரையும் விடுதலைப் புலிகள் தரப்பினரையும் சந்தித்து ஜான் பீற்றர்ஸன் விரிவான பேச்சுக்களை நடத்தினார். எனினும், அந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. இரு தரப்பினருக்கும் இடையிலான முரண்பாடுகளே தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் நாளைமறுமதினம் சனிக்கிழமை தேசியத் தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையாற்றவுள்ளார். அதில் சமாதானம் பற்றிய முக்கிய விடயங்கள் வெளிவரும் என அனைத்துத் தரப்பினராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாத நடுப்பகுதியில் அரச தொலைக்காட்சியில் பேட்டி அளித்த ஜனாதிபதி சந்திரிகாவும், புலிகள் பேச்சுக்கு வருகிறார்களா இல்லையா என்பதை அவர்கள் இந்த மாத இறுதிக்குள் தெளிவுபடுத்த வேண்டும் என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## கௌரவிப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.25

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மாவீரர் மற்றும் போராளி குடும்பத்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஆனைப்பந்தியில் அமைந்துள்ள அதன் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (எ-6)

★ ★ ★

ஏழாலைப் பகுதியில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள், இன்று மாலை 6 மணிக்கு ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலையத்தில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாட்டினை அப்பகுதி சனமூக நிலையங்கள் மற்றும் உடுவில் அரசியல்துறைப் பணிமனை என்பன மேற்கொண்டுள்ளன.(எ-6-45)

★ ★ ★

மாவீரர்களின் பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு புத்தூர், புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் 50 இற்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கலந்து கொள்வர். இந்நிகழ்வில் நீர்வேலி அரசியல் துறைப் பொறுப்பாளர் சங்கர் கலந்துகொள்வார். இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும். (எ)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்.எவ் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புலிகளுக்கு எதிரான கோஷங்களும் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிரான மகஜர் ஒன்றும் நோர்வேத் தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. (எ-க)

## யுத்தமோ சமாதானமோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.ஆரின் கூற்றினால் இன்று இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலை எல்லோருக்கும் தெரியும்.

தமிழர்களை மீண்டும் யுத்தத்துக்கு அழைக்காதீர்கள். அதன் பிரதிபலன் மிகவும் மோசமாக இருக்கும் என்று எச்சரிக்கின்றேன்.

நாடே கொளுந்துவிட்டு எரியும் ஒரு சூழ்நிலையில் எதிர்க்கட்சியில் உள்ளவர்களை அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து எப்படித் தன்பக்கம் விலைக்கு வாங்கலாம் என்ற கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது அரசு.

ஜே.வி.பி. தோழர்களே! அப்போதிருந்த அரசில் 32 பேர் அமைச்சர்களாக அங்கம் வகித்த போது, அதை எதிர்த்து லிப்டன் சுற்றுவட்டத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த நீங்கள், இன்று 84 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட பின்னரும் அமைதியாக இருப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. உங்களுக்கு வெட்கமும், ரோஷமும் இருந்தால் நீங்கள் அரசை விட்டு வெளியேறவேண்டும். அல்லது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்யவேணடும். இன்று அரசு பக்கம் இருந்துகொண்டு முதுகெலும்பு இல்லாத மனிதர்களாக இருக்கிறீர்கள.

எதிர்க்கட்சியில் இருந்த சில தமிழ் பேசும் எம்.பிக்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகள் என்ற எலும்புத்துண்டுகளுக்காக தமது கட்சியையே தாரைவார்த்துள்ளனர்.

தமிழ்ப் பேசும் எம்.பிக்கள் இப்படிச் செய்வது தமிழ்ப் பேசும் மக்களுக்கு இழைக்கும் மகாதுரோகம்.

எதிர்க்கட்சியில் இருந்து சென்ற மூன்று முஸ்லிம் எம்.பிக்களும் தமது இனத்தின் பால் கொண்ட பற்றுக்காரணமாக அரசில் சேரவில்லை. அவர்களுக்கு வீசப்பட்ட எலும்புத் துண்டுகளுக்காகவே சென்றுள்ளனர். மட்டக்களப்புக்கும், திருகோணமலைக்கும் அபிவிருத்தி செய்யும் அமைச்சுப் பதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது கிழக்கிலே தமிழர் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் ஒரு செயல்.

பாகிஸ்தான் பிரதமர் கள்ளத்தனமாக இலங்கைக்கு வந்து 90 கோடி ரூபா பெறுமதியான யுத்த தளபாடங்களை இலங்கை இராணுவத்துக்கு வழங்கியுள்ளார். இது தமிழர்களை அழிப்பதற்காக வழங்கப்பட்ட உதவி என்பதே உண்மை. நீங்கள் வழங்கிய யுத்த தளபாடங்களால் வடக்கு - கிழக்கிலே வாழும், உங்களின் மதத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம் சகோதரர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதை பாகிஸ்தான் அரசிடம் நான் வலியுறுத்திக்கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் காலை நேரத்தில் ஒலிபரப்பப்படும் இதயவீணை நிகழ்ச்சி ஈ.பி.டி.பியின் அரசியல் குரலாக ஒலிக்கிறது. அந்த இயக்கத்தின் மஞ்சள் பத்திரிகைக்கு அது வக்காலத்து வாங்குகிறது. ஏன் இந்தப் பாகுபாடு?

ஊடகத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சேகு இஸ்ஸதீன், ஈ.பி.டி.பி. இயக்கத்தின் பிரசாரத்துக்காக அரச வானொலியைப் பயன்படுத்த அனுமதிப்பதை ஏற்கமுடியாது.

தமிழர் கூட்டமைப்பு அதன் கொள்கைகளை ஒருபோதும் மாற்றிக்கொள்ளாது.

அதேசமயம், யாருக்கும் அவர்கள் விலை போகவும் மாட்டார்கள் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களைக் குறிவைத்து பஜிரோவில் சுற்றித்திரிந்த ஆயுதபாணிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இப்படியான நிழல் யுத்தம் தொடர்ந்தால், புலிகளும் நிழல் யுத்தமொன்றுக்குத் தயாராகவே இருக்கின்றனர் என்பதை எச்சரித்துக் கூறவிரும்புகிறேன். பௌத்தத்தை பாதுகாப்போம் என்று கூறிக்கொண்டு இந்தச சபைக்கு வந்த பிக்குகள் பௌத்தத்துக்குச் சேவை செய்வதை மறந்துவிட்டு யுத்தமுழக்கம் செய்து வருகின்றனர். இதுதான் பௌத்த மதத்துக்கு அவர்கள் செய்யும் சேவையா எனக்கேட்க விரும்புகிறேன்" - என்றார் ரவிராஜ் எம்.பி. (எ-க)

## ராஜகிரியவில் முதலாம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட இந்த பட்ஜெட்டில் இல்லை. அரச ஊழியர்களுக்குமான சம்பள அதிகரிப்பு என்பது வெறும் கண்கட்டு வித்தை. அரச ஊழியர்களுக்கான ஒரு மணித்தியால மேலதிக நேரக்கடமை குறித்து இன்று பிரச்சினை எழுந்திருக்கிறது. 8 மணி நேரத்திற்கும் மேலதிகமாக ஒரு மணிநேரம் தொண்டரடிப்படையில் சுயேச்சையாக அரச ஊழியர்கள் கடமையாற்றுவார்களென நிதியமைச்சர் கூறினாலும் அதற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்பது முக்கியமானதாகும். இப்படியான நிலையில் மிச்சப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவுப் பணத்தையே அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பிற்காக அரசு பயன்படுத்தப்போகிறது. அப்படியானால் அரச ஊழியர்களுக்கான வருமானத்தில் எந்த மாற்றமும் புதிதாக ஏற்படப் போவதில்லை.

ஊழியர்களின் உரிமைகளை மீறும் எந்தச் செயலையும் பார்த்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி மௌனமாக இருக்காது.

அரச ஊழியர்களுக்கான மருத்துவ காப்புறுதிக் கட்டணம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் பதினொரு ரூபா 73 சதமாக இருந்தது. இன்று அது 75 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் சராசரியாக 900 ரூபாவை அரச ஊழியர்கள் இழக்கின்றனர். மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக ஐதேக அரசு 225 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. 11 ரூபா 73 சதம்படி அரச ஊழியர்களிடமிருந்து மொத்தமாக 160 மில்லியன் ரூபா அரசுக்கு வந்தது. எனறாலும் அப்போது காப்புறுதித்துறை தனியார்மயமான பின்னர் அரச ஊழியர்களின் காப்புறுதிக்காக அரசு 425 மிலலியன் ரூபாவை ஒதுக்கியது. ஆனால், இந்த அரசாங்கம் அரச ஊழியர் மருத்துவ காப்புறுதிக்காக 500 மில்லியன் ரூபாவை ஒதுககியுள்ளது. அதே நேரம் மாதாந்தம் அரச ஊழியாகளின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும் பணம் 400 மில்லியன் ரூபாவாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, 500 மில்லியன் ரூபா போக மீதி 400 மில்லியன் ரூபா யாரின் கைகளுக்குப் போகிறது?.

கிராமிய அபிவிருத்தி, வெல்லஸ்ஸ பிராந்திய அபிவிருத்தி, ரஜரட்ட அபிவிருத்தி என்ற திட்டங்களுக்கு தலா 300 மல்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது எந்தளவு போதுமான தென்று தெரியவில்லை. தயட்ட செவன என்ற வீடுகளை அமைக்கும் செயற்றிட்டத்திற்கு மூன்று லட்சம் வீடுகளை அமைப்பதற்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படியானால் ஒரு வீடு அமைப்பதற்கு 2,500 ரூபாதான் செலவாகின்றதா?

அரச சேவையிலிருந்து ஊழியர்கள் இப்போது வெளியேற்றப்படுகின்றனர். சுகாதார அமைச்சில் 1,500 பேரும், தொழில் அமைச்சில் 153 பேரும் அடங்கலாக ஒட்டுமொத்த அரசதுறையில் ஐயாயிரம் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அரசு இந்த வரவு - செலவுத் திட்டம் சுமார் மூன்று மாத காலத்திற்குத் தேவையான ஒன்றுபோல தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு ஏதோவொரு திட்டத்தை உள்ளே வைத்துக்கொண்டு இதனைச் சமர்ப்பித்துள்ளது போலவே தெரிகிறது - என்றார் அவர். (எ-க-6)


IIS

புலமைப்பரிசில் திட்டம் 2005

கல்வியாண்டு 2005/2006 இற்கான புலமைப்பரிசில் திட்டம் 2005 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி

30.11.2004

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சீ-39294)



அனைவருக்கும் புலமைப்பரிசில்

COMPUTER EXPRESS

Institute of Information Technology

இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.

(Off Stanly Rd.) 0777222422, 0777917781

அனைவருக்குமான புலமைப்பரிசில் திட்டத்திற்கான வகுப்புகள் ஆரம்பம்

26.11.2004 -12.00 p.m.

28.11.2004 -11.30 a.m.

80% OFF


## அந்தியேட்டி- சபிண்டீகரண அழைப்பு



மலர்வு 11 - 06 - 1951

உதிர்வு 27 - 10 - 2004

கடந்த 27.10.2004 புதன்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### பொன்னுத்துரை வேணுகோபாலவாணிதாசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.11.2004) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவிலும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் பகல் 11 மணியளவிலும் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சீ-39298)(29-11-16)

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருணாசலம் மகேஸ்வரி



ஒட்டுவெளி, மிருசுவிலை வசிப்பிடமாகவும் இல.17, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் மகேஸ்வரி அவர்கள் 23.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.17 ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில்.*

(38958)(29-11-16)

தகவல்:
அ.அகிலதாஸ்
(மகன் -அதிபர்
யா/கோப்பாய் ம.வி.).

### திருமதி தங்கவேல் சிந்தாமணி

பதுளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கவேல் சிந்தாமணி நேற்று (24.11.2004) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேலின் அன்பு மனைவியும் தயாளதுரை (இந்தியா), முத்துக்குமார் (ம.உ.ஆணைக்குழு, யாழ்.), தில்லைநாதன் (தில்லை ஸ்ரோர்ஸ் - உதயன் (முகவர்), நவமணி (பதுளை), பத்மநாதன், கதிர்காமநாதன் (இ.பெ.கூட்டுத்தாபனம், யாழ்.) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மொறின் (கச்சேரி - யாழ்.), மதிவதனி, கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்ற விஜயலக்சுமி மற்றும் தியாகேஸ்வரி (இ.பெ.கூ.) ஆகியோரின் அன்பு மாமியாரும் மெடோன், டயான்ரோ, டிலான்ரோ, இவோன்கா, ஜெந்தூரன், சங்கீதா, பிரபாஷினி, ரிஷான், கோபிநாத், தட்சனா, உமாருஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2004) வெள்ளிக்கிழமை பதுளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*107, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(38957)(29-11-16)

தகவல்:
பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.